SL
R65900211, N11 VD
M29.14.5
186T36.

Regd: No. M. 916.

THE VEDANTA DIPIKA

வேதாந்த தீபிகை.

ருதிரோத்காரி வரு,

1923—1924.

ஸம்புடம் 14.

மாசிமீ.

FEBRUARY.

ஸஞ்சிகை 5.

பத்ராதிபர்.

நடாதூர்
ஸ்ரீநிவாஸாசார்யர்,
பி.ஏ., பி.எல்.

கார்யதர்சி.

ஆர். ஸ்ரீநிவாஸராகவ
அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

1. பத்ராதிபரின் குறிப்புகள் 137
2. ப்ராணாக்நிஹோத்ர நிர்ணயம்.—
ஸ்ரீ உ. வே. நடாதூர். நரஸிம்மாசார்யர். 142
3. ஸ்ரீ விஷ்ணு ஷட்பதீ.—ஸ்ரீ சங்கராசார்யர். 145
4. கடித ஸங்க்ரஹம்.—ஸ்ரீ. உ. வெ. திருமாலி ஸ்ரீநிவாஸாசார்யர். 147
5. புஸ்தக விமர்சம்.—பத்ராதிபர். 149
6. உபய வேதாந்தம்.—
ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு. சிங்கபெருமான் ஸ்வாமி. 151
7. ஒரு வைஷ்ணவ ப்ரமுகரின் நிர்யாணம்.—பத்ராதிபர். 152
8. ஸ்ரீ யத்ராமாநுஜ யதாபிவ்ருத்தி.—
ஸ்ரீ உ. வே. தி. ஈ. சடகோபாசார்யர் பி. ஏ. பி. எல்., 153
9. மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்.—
ஸ்ரீ உ. வே. வாஜபேயம். வீரராகவதாதாசார்யர். 161
10. ஸச்சரித்ர ரக்ஷை, தமிழ்மொழிபெயர்ப்புடன்.—
ஸ்ரீ. உ. வெ. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 25

K. R. Press, Madras.

வர்ஷச்சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4.



ஜெர்மன்

டிக்-டாக் கடியாரம்

புதியதாகவும், நூதனமாகவும், ஜெர்மன் தேசத்தில் இருந்து வரவழைக்கப்பட்டது. சரியான காலம் காட்டக் கூடியது. மிக்க அழகாயும், மிக்க நேர்த்தியாயும் தயார் செய்யப்பட்டது.

விலை ரூ. 3 தான்.

இன்றே ஒன்று வரவழைத்துப் பாருங்கள்.

இது வேண்டுமா?

உயர்ந்த கையில் கட்டும் கடியாரம் தோலுடன் அனுப்பப்படும்.



லீவர் மூவ்மெண்டு நெடுநாள் உழைக்கக்கூடுமான அழகுள்ள கை கடியாரம். செலவு அநேகம் ஆய்விட்டது.

கையில் கட்டுவதற்கு மிக்க அழகாயுள்ளது. விலை தோலுடன் ரூ. 7—8—0

விலாசம்:—வி. எஸ். வாச் கம்பெனி., தபால்பெட்டி 105, மதராஸ்.

விளம்பரம்.

திருநெல்வேலி ஜில்லா புளியங்குடியிலிருக்கும் போலீஸ் பிராஸிக்யூடர், ஸ்ரீ. உப T. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, சிகை வைத்துக்கொள்ளுதல், யஜ்ஞோபவீதம் தரித்தல், ஸந்த்யாவந்தனம் செய்தல், இவைகளின் ஸ்வரூபம், உபபத்தி (rationale) ஆவச்யகதை, ஐஹிக ஆமுஷ்மிகபலம் இவைகளை ஸ்பஷ்டமாய் ப்ரமாணபூர்வகமாய் எளிதான தமிழில் எழுதும் முதல் தரமான வியாஸத்துக்கு இனும் 15 ரூபாய் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார். இதை எழுத விருப்பமுள்ளவர்கள் வியாஸத்தை எழுதி ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சிக்குச் சித்திரை மீ 1உக்குள் அனுப்பவேண்டியது. அவைகள் ஸபையின் பண்டிதரால் பரிசோதிக்கப்பட்டு முதல்தரமான வியாஸம் எது என்று நிர்ணயிக்கப்படும். வியாஸம் எழுதுகிறவர்கள், தங்கள் ஆசார்யனிடமிருந்தோ, அல்லது தங்கள் ஸமீபத்தில் வஸிக்கும் பெரியோர்களிடமிருந்தோ 'வேறொருவருடைய உதவியின்றியே இவரால் இந்த வியாஸம் எழுதப்பட்டது' என்று ஒரு அத்தாக்ஷி பத்திரம் டை வியாஸத்துடன் அனுப்பவேண்டியது.

கார்யதர்சி.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி. ஏ., பி. எல்.

கார்யநிர்வாஹி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ருதிரோத்காரிஹூ, மாசிமீ. [ஸஞ்சிகை 5.

" த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே।

வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா॥"

ஸ்ரீபாகவதம். 1-9-23.

பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் விசேஷ ஆகாரங்கள்.

(தொடர்ச்சி.)

'ஹிந்து மதங்க' ளென்று பொதுவாய் வ்யவஹரிக்கப் படுமவைகளில் ஈச்வரன், ஜீவன் அசேதனம் என்னும் மூன்று தத்வங்களைப்பற்றிய விசாரணையை முன்னிட்டே மத விசாரங்களைச் செய்கின்றதும், உலகத்தில் காணப்படும் ஸுகதுக்காதி தாரதம்யங்களுக்கு ஸமாதானமாகச் சொல்லப்படும் கர்மதத்வமும் (the doctrine of Karma), அவை ஸ்ரீ வைஷ்ணவ வேதாந்த மதத்தில் நிரூபிக்கப்படும் ப்ரகாரங்களும் முன் இரண்டு ப்ரகரணங்களில் சொல்லப்பட்டன.

இவற்றில் ஈச்வர தத்வம் இன்னபடி யிருக்குமென்பதை நிர்ணயிக்க வேண்டியது முற்பட ஆஸ்திகர்களின் கடமை. அஃதன்றி ஒருவிதமான மத ப்ரவ்ருத்தியுமுண்டாகாது. ஸர்வேச்வரனொருவனுக்கு நாம் உத்தரவாதியாகிறோம் என்னும் நினைவு (Divine Sanction) இல்லாவிடில், இந்த

186726 3L R65

ஆயுளில் நாம் ப்ரத்யக்ஷமாய் அநுபவிக்கக்கூடிய இன்பங்களை ந்யாயமாகவோ, அந்யாயமாகவோ எவ்விதத்திலாவது ஸம்பாதித்து விடவேண்டுமென்னும் ஆசையும் அதன் நிமித்தமான ப்ரவ்ருத்திகளும் மாத்திரம் உண்டாகுமே யன்றி, வேறு நன்மை தீமை யென்றெதுவும் நமக்குப் புலப்படாது. இந்த ஈச்வர விச்வாஸம் நிலைப்பதற்கு ஈச்வரஸ்வரூபத்தில் தீர்மானமான ஜ்ஞாநமும் அதில் நிலையும் வேண்டும். யுக்தி மாத்திரத்தினுல் இவ்விதமான நிலை பெற்ற அறிவு உண்டாகாது. பௌதிக சாஸ்த்ரங்களினுலும் (Physical Sciences) பலதேசங்களோடு நேரிட்டிருக்கும் அபிகாதங்களாலும் குலைவுண்ட மனோதர்மங்களைப் பெற்றிருக்கும் இக்காலத்தவர்க்கு இதை எவ்வளவு முறை வற்புறுத்தினுலும் மிகைபடாது! நேராக ஈச்வரனை யில்லையெனத் துணியாமல், அவன் ஒரு சக்தி விசேஷமேயென்றும், ஈச்வராதிக்யம் (Divine Control) என்பது ப்ரபஞ்ச ஸ்பாவம் (Nature) தான் என்றும், பரோபகாரந்தானே மனிதனுக்கு ஸ்வபாவமான ஸுகம் என்றும், அதல்லதுவே துக்கமென்றும், இப்படிகளில் நன்னடக்கை துர் நடக்கைகளுக்கு விதாயகங்களைக் கற்பனை செய்வதினுல் நன்னெறி நடப்பது ஸ்திரப்படாது. அன்றியும் நல்வழி யென்பதற்கு மாருத பொருளும் ஏற்படாது. ப்ரபஞ்சத்தைப் பொய்யாக்கி ஜீவ ஐச்வரர்களை ஒன்றுக்குகிறவர்களும், முடிவில் ஒன்றுமே இல்லை என்னும் சூன்யவாதிகளும், தமது கொள்கைகளை உள்ளபடி நடத்துவர்களேயாகில், நாஸ்திக்யம், ஸ்வயநலம் நாடுகை, அதற்காக அதர்மத்தில் கூசாது புகுதல், அல்லது ஒன்றாலும் தேருத வெறுப்பு (Pessimism), முதலியவைகளுக்கு எளிதாய் இரையாய் விடுவார்கள் என்பது, தானே விளங்கும். ஆதலால் 'ஆவாரார் துணையென்று அலைகடலுள் அழுந்துகின்ற நாவாய் போல்' ஜன்ம ஸம்ஸாரபந்தத்தில் உழலுமவர்கள் அதிலிருந்து விடுபட்டுப் பரம ஸாம்ராஜ்யத்தை யடைவதற்கும், இங்கிருந்த நாள் தன்னளவிலும் பிறர்பொருட்டும் ஊனமற்ற நல்வாழ்வு வாழ்வதற்கும், 'க்ஷேத்ரஜ்ஞஸ்ய ஈச்வரஜ்ஞாநாத் விசுத்திः பரமா மதா' என்று யாஜ்ஞவல்க்ய ரிஷி சொன்னபடி, ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யடைந்த சேதனனுக்கு ஈச்வரனைப்பற்றிய நிஷ்க்ருஷ்டமான அறிவை விட மேற்பட்ட பரிசுத்தகரமான உபாயம் கிடையாது.

ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்கள், ஸ்ரீபாஞ்சராத்ரம், ஆகிய ப்ரமாணங்களைத்திரட்டிப் பரஸ்பரம் விரோதமின்றி ஸமரஸமாய் விளக்கும் திவ்யப்ரபந்தங்கள் ஆசார்ய திவ்ய ஸூக்திகள் முதலியவற்ருல் 'ஸ்ரீமாந் நாராயணோ நः பதிः அகிலதநுः முக்திதோ முக்தபோக்ய:' (ஸ்ரீமானை நாராயணனே நமக்கு சேஷியான ஸ்வாமி; அவனே மோக்ஷத்தை யளிப்பவன்; அவனே முக்த தசையில் நம்மால் அநுபவிக்கப்படுமவன்) என்று நிர்மாணிக்கப்பட்டது. இந்த ஸ்ரீமந்நாராயணன் ஜீவனல்லன்; இந்திரன் முதலிய

தேவதைகளி லொருவனுமல்லன்; த்ரிமூர்த்திகளில் ப்ரும்ம ருத்ரர்களு மல்லன்; அவர்களுக்குச் சமானமானவனு மல்லன்; த்ரிமூர்த்திகளிலும் வேறுபட்ட தனியிறையு மல்லன்; ஆனுல் அவன் த்ரிமூர்த்தி மத்யஸ்தனுப் ப்ரும்மாவுக்கு அந்தர்யாமியாயிருந்து தான் ஸ்ருஷ்டித்த ஸர்வ லோகங்களையும் ரக்ஷிப்பதற்காகத் தன்னருளால் தானே 'உலகினில் தோற்றமாய் நின்ற சுடர்' ராகிய ஸ்ரீ விஷ்ணுவே, என்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டது. இந்தப் ப்ரமாணங்கள் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பரதாய க்ரந்தங்களில் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கின்றன வாகையால், இங்கு விஸ்தரித்தல் அவ்வளவு அவச்யமல்ல. இது ஸம்பந்தமாக இரண்டொரு விஷயங்களை மட்டும் குறிப்பிடவேண்டும்.

1. ப்ரபஞ்சத்துக்கெல்லாம் ஈச்வரனெருவனே; எந்த ஆஸ்திமதஸ்தர்களும் அப்படி யொருவனை ஒப்பவில்லையா?, என்றுல், அது உண்மையே. வெறும் பெயரினுல் மட்டும் விவாதங்கள் ஏற்படவில்லை. ஆனுல் நாம் பரதேவதை யென்று தொழவேண்டிய பகவானுடைய ஸ்வரூபம், குணம், அவனேடு ஸம்பந்தம் முதலியவற்றில் தெளிவு இன்றிமையாதது.

2. அப்படியே பரப்ரும்மத்தை ச்ருதிகளில் ருத்ரன், சம்பு, சிவன் என்னும் பதங்களினுல் வ்யவஹரித்திருப்பது வைஷ்ணவர்களுக்கு விரோதமல்ல. ருத்ரன்—ஸம்ஸார துக்கத்தைப் போக்குகிறவன், சம்பு — ஸுகத்தைக் கொடுப்பவன்; சிவன்—மங்களமானவன், என்றபடி முறையே இப்பதங்கள் கல்யாண குணங்களைச் சொல்லி பகவானுடைய நாமங்களே யாகின்றனவென்று நம் பூர்வர்கள் நிரூபித்திருப்பது மட்டு மல்லாமல், ஸ்ரீமத் சங்கராசார்யரும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் 'ஸர்வः சர்வः சிவः ஸ்தாணுः' என்பதின் பாஷ்யத்தில், 'ஸ ப்ரஹ்மா ஸ சிவः' (அவனே ப்ரும்மா, அவனே சிவன்) என்ற புருஷ ஸூக்த வசனங்களை உதாஹரித்து 'சிவாதி நாமபிः ஹரிரேவ ஸ்தூயதே' (சிவன் முதலிய நாமங்களினுல் ஹரியே ஸ்துதிக்கப் படுகிருர்) என்று விளக்கியிருக்கிருர்.

3. ஸ்ரீ பாஷ்யகாரரும் ப்ரும்ம ஸூத்ரத்தில் பாசுபதாதி மத கண்டன ப்ரகரணத்தில், பாசுபத மதத்தில் பரதத்வத்தைப் பசுபதி யென்று பெயரிட்டு அதற்குச் சொன்ன ஸ்வரூபத்தைத் தாம் ஆக்ஷேபிக்கவில்லை யென்றும், ஆனுல் அத்தகைய ப்ரும்மம் ப்ரபஞ்சத்துக்கு நிமித்த காரணம் மாத்திரம், என்றதை மட்டுமே நிராகரித்தன ரென்றும் அருளிச்செய்தார். (கேவல நிமித்தகாரணதா..............நிராக்ருதா: । ந பசுபதி ஸ்வரூபம்).

4. புராணங்களில் சொல்லப்படும் ப்ரும்ம ருத்ராதிகள், பகவானுல் ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்கள், பகவானுடைய மாயாஸங்கல்பத்துக் குட்பட்டவர்கள்,

பகவானுக்கு ஏவல் தொழில் செய்பவர்கள், தாங்களே மோக்ஷமளிக்க வல்லமை யற்றவர்கள், பகவானை ஆராதித்துத் தந்தாம் பதவிகளையும் ஐச்வர்யங்களையும் பெற்றவர்கள், அவனுக்குச் சரீரமாய் சேஷமாயிருப்பவர்கள், காமக்ரோத பரவசர்கள், அதனுல் துக்கமனுபவித்துப் பின்னர் பகவானிடத்தில் சரணம் புகுந்து மீண்டவர்கள், என்றிப்புடைகளில் பல வ்ருத்தாந்தங்கள் காணப்படும். ஸ்ரீ விஷ்ணுவின் திறத்தில் அத்தகைய கதைகளொன்றுமில்லை.

5. அவதார தசையில் பகவான் ஸுகதுக்கானுபவம் பண்ணுவதும் தேவதைகளைத் தொழுவதும், க்ருஷ்ணன் புத்ரனை வேண்டிக்கைலாஸ யாத்ரை செய்தது முதலியவையும் லோகத்தாரை யநுஸரித்து லோக தர்மத்தை அநுஷ்டித்துக்காட்டும் அபிநயங்களே.

6 த்ரிமூர்த்திகளும் ஸ்ருஷ்டி, ரக்ஷணம், ஸம்ஹாரம் என்னும் கார்யங்களைச் செய்வதற்காக ஒரே பரப்ரும்மம் வெளிக்காட்டின ரூபங்களென்பவர்களுடட, ஸர்வேச்வரன் ரஜோகுணத்தில் பிரவேசித்து ப்ரும்மாவானன், தமோகுணத்தில் பிரவேசித்துச் சிவனுன், ஸத்வகுணத்தை அதிஷ்டானம் செய்து செய்து விஷ்ணுவாய் ரக்ஷண வ்யாபாரத்தைச் செய்கிருன் என்பதையும் மற்ற பலங்களை ப்ரும்மருத்ரர்களிடம் பெறலாமாகிலும், மோக்ஷம்கொடுக்கும் அதிகாரம் ஸத்வமயமான விஷ்ணுரூபத்துக்கே என்பதையும் ஒப்புகிருர்கள். முமுக்ஷுக்களான அத்வைதிகள் ஸகுண உபாஸநம் செய்வதும் 'ஸர்வாங்க ஸுந்தரன்' என்னும்படியான ஸ்ரீவிஷ்ணுவின், திவ்யமங்கள விக்ரஹத்தையே என்பதும், ஸ்ரீமத் சங்கராசார்யர் க்ரந்தங்கள் முதலியவற்ருல் விளங்கும்.

7. மோக்ஷமென்பது 'தத்விஷ்ணோ: பரமம் பதம்' (விஷ்ணுவினுடைய அந்த ஸர்வோத்க்ருஷ்ட ஸ்தானம்) என்று உபநிஷத்துக்களில் பேசப்பட்டது. அதை அநுவதித்து ஸ்ரீமத் சங்கராசார்யரும் தமது விவேக சூடாமணியில் அவித்யை நீங்கி ப்ரும்மத்தோடு ஒன்றுகும் அத்வைத மோக்ஷ நிலையை : 'ஸோऽத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம்' என்று பேசினுர்.

8. பெயரில்லாத ப்ரும்மத்தின் உபாஸநம் உபநிஷத்துகளில் ஆதியில் பேசப்பட்டன வென்றும், விஷ்ணுவென்றும் சிவனென்றும் பரதேவதைக்குப் பெயர்கள் பின்னர் இதிஹாஸ புராண காலங்களி லுண்டானவை யென்றும் இக்காலத்திய நிபுணர்களின் கொள்கை. அப்படி வகுப்படைந்த மதங்களில் (sects) முற்பட்டது வைஷ்ணவமேயென்றும், ருத்திரன் பெயர் உபநிஷத்துக்களில் காணப்பட்டாலும், பாசுபத அல்லது சைவமதமும் அதை யொட்டிய க்ரந்தங்களும், விஷ்ணுமதத்தையும் வைஷ்ணவ க்ரந்தங்களையும் ஒட்டிப் பிற்பாடு உண்டானவை யென்றும் அவர்கள் பராமர்சத்தில் தீர்மானித்தார்கள். இந்நிபுணர்களில் பெயர்பெற்ற ஒருவரான டாக்டர் பார்க்குஹார் (Dr. J. N. Farquhar)

ஆங்கிலத்தில் இயற்றிய ஹிந்துமதக்ரந்த பராமர்சங்கள் (Outlines of the Religious Literature of India, P. 101) என்னும் புத்தகத்தில், 'இதிஹாஸத்திலும் புராணத்திலும், சிவனுடைய ஸ்தாநம் தாழ்ந்ததாகவே இருக்கிறது. பிற்காலத்திய நூல்களில் சிவனை உயர்வாகப் பேசியிருக்கும் வாசகங்கள் ஏராளமான வைஷ்ணவ ஸித்தாந்தங்களை விடப் பிற்பட்டவையென்று வித்யாநிபுணர்கள் ஒருமனதாய் எண்ணுகிருர்கள். பிற்பாடான சைவமும், புது வைஷ்ணவத்தைத் தெரிந்து உத்தேச்யமாகவே பின் பற்றிற்று என்பதும் ஸம்பாவிதம்.

'சிவனைப்பற்றிய ப்ரகரணங்களில் அவன் ஸ்தோத்ரங்களும், மாஹாத்ம்யமும், அவனை ஸ்தோத்ரம்பண்ணிச் சில வீரர்கள் திவ்யாஸ்த்ரங்கள் முதலிய ப்ரயோஜநங்களைப் பெறுவதும் சொல்லப்படுகின்றன. அவை முக்கியமான வருத்தாந்தங்களல்ல...
சிவஸஹஸ்ரநாமம் விஷ்ணுஸஹஸ்ரநாமத்தைப் பார்த்து உண்டாக்கப்பட்டது. இவற்றில் விஷ்ணுவர்ணனைகளில் பகுதி ஒரு கூட்டாகச் சிவபரமாக்கப் பட்டிருக்கின்றன. பெயர்களில் மட்டும் மாறுபாடு செய்யப்பட்டது. சிவனே உபநிஷத்துக்களில் பேசப்பட்ட பரப்ரும்மமென்றன; ஆனுல் வைஷ்ணவமதத்தின் மற்ருெருபகுதியான அவதார ரஹஸ்யம் சிவனைப்பற்றிப் பேசப்படவில்லை. அதற்குப் பதிலாகச் சிவன் பலவேஷங்களுடனும் ரூபங்களுடனும் வந்து பக்தர்களைச் சோதிப்பதும அவர்களுக்கு அருள் தருவதும் உபதேசம் செய்வதும் காணப்படுகின்றன' என்று வரைந்தார்.

9. நிர்க்குணப்ரும்ம மொன்றே ஸத்யமென்னும் அத்வைதிகளுக்கு ஸகுணரூபமான ஸகுண ஈச்வரனும் முடிவில் பொய்யாகையால், அவர்கள் விஷ்ணு சிவன், கணபதி அம்பிகை ஸூர்யன் முதலிய எந்த ப்ரும்மமல்லாத (ப்ரதீக) ரூபத்தையும் பூஜைசெய்யலாம். ஆனுல் புருஷோத்தமனுன ப்ரப்ரும்மத்தை ஆராதிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் அவனை இன்னுனென்று சாஸ்த்ரங்களைக் கொண்டு நிர்ணயிக்காவிடில், அவர்கள் செய்யும் ஆராதனம் சாம்பலில் செய்த ஹோமம்போலவும், யஜமானனைப் பேட்டி காணப்போனவர் ஸேவகனைப் பேட்டி கண்டு ஏமாறுவதைப்போலவும் ஆகும் என்பது ஸ்வரஸமாகத் தெரியவரும்.

இப்படிகளில் நீரவிசாரித்துத் தெளிந்தால், ஸ்ரீவைஷ்ணவர்கள் குறுகிய த்ருஷ்டியுடையவர்களென்றும் ஸமபுத்தியில்லாதவர்களென்றும் சிவத்வேஷிகளென்றும் இம்மாதிரிகளில் சொல்லப்படும் நிந்தைகளெல்லாம் 'புத்தென்றே' காணப்படுவது திண்ணம்.

(தொடரும்)

மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்.

திருக்குடந்தை 'மஹாக்ஷித் ஸ்ரீ. உ. வெ வாஜபேயம் வீரராகவாசார்ய ஸ்வாமி மதப்ரஷ்ட ப்ராயச் சித்தத்தைப்பற்றி எழுதியிருக்கும் வ்யாஸம் இதில்

மற்றொரு பக்கத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்வாமி ஸ்ம்ருதிவசநங்களை நிரூபித்திருக்கும் ப்ரகாரங்களில் பண்டிதர்களுக்குள் அபிப்ராய பேதம் இருக்குமென்பது நிச்சயம். அப்படியுண்டானால் அதற்கும் தாம் உத்தரம் தருவதாக எழுதியிருக்கிறார். இதே மாதிரி சென்றவர்ஷத்திலும் ஒருகடிதம் தீபிகையில் ப்ரசுரமாயிருப்பதைத் தீபிகை நண்பர்களறிவார்கள். இவ்விஷயத்தில் சாஸ்த்ரமிருக்கும் படியை வைதிக வித்வான்கள் சேர்ந்து முடிவாக நிஷ்கர்ஷிக்க வேண்டியது மிகவும் ஆவச்யகம்.

ஸ்ரீ வாஜபேயம் ஸ்வாமி சொல்வதில் ஒன்றைமட்டும் நாம் குறிப்பிடவேண்டும். அதாவது மனம் நொந்து ஸ்ரீமந்நாராயணனைச் சரணமடைந்தாலும் மதப்ரஷ்டராய்ப் பிறகு திரும்பினகாரணத்தினாலேயே பரலோகத்தில் நல்ல கதிக்கு ஹாநியுண்டாமென்று இவர் எண்ணுகிறார் போலும்! அப்போது அந்தணரந்திய ரேலையுள்நின்ற அனைத்துலகும் நொந்தவரே முதலாக வந்தடையும் வகை' என்று சரணாகதியை நம்தேசிகனருளிச் செய்தது என்னாவது என்பதே!

ஸ்ரீ:

ப்ராணாக்நி ஹோத்ர நிர்ணயம்.

[ஸ்ரீ. உ. வே. நடாதூர் நரஸிம்மாசார்யர்.]

பஞ்சகால பராயணர்களான த்விஜர்கள் இஜ்யை என்னும் பகவதாராதனத்தைச்செய்து அதன் எட்டாவது அங்கமாகிய போஜநத்தைச் செய்யவேண்டும். இதை அநுயாகமென்கிறது. இதற்குமுன் வைச்வதேவம் பண்ணுவது; போஜநத்தில் முன்னர் ப்ராணாஹுதி செய்வது; என்பது பொதுவாய்த் தெரிந்த விஷயம். இது ஜயாக்ய ஸம்ஹிதையில் 'உஜ்ஞாராய நாநஞாரம் வெவஶ்வடிவாஜெ', 'ஷூணாமிஷுவநம் நாஜ்ரா கூஷதூயாமும் தஷிஷ்டீமம்' என்று சொல்லப்பட்டது. ப்ராணாஹுதியை முன்னிட்டுக்கொண்டிருப்பதால் போஜநத்துக்கும் 'ப்ராணாக்நிஹோத்ரம்' என்று பெயருண்டு. பகவானுக்கு நிவேதநம் பணணப்பட்ட அன்னத்தினாலேயே அநுயாகம் (போஜநம்) செய்யப் படவேண்டுமென்பதும் சாஸ்த்ரஸித்தம்.

'ஷூணாஷிஹொத்ஜும் மஜாஸொ ஷூவணவஜும் ஜமெநாக்ஷிமெத: | கூயவாக ஷூணாஹுதீ நக்ஷும் கநிநூநெவ ஷவயெக:'— (வைத்யநாதீயத்தில் - வ்யாஸ ஸ்ம்ருதி வசநம்) என்பதுபோன்ற வசநங்களினால், ப்ராணாஹுதியை உப்பு, வ்யஞ்சனாதிகளில்லாத சுத்தான்னத்தால் செய்யவேண்டுமென்றும், ராத்திரியில் லவணம் சேர்ந்த அந்நத்தாலும் செய்யலாமென்றும் ஏற்படுகிறது.

இப்படியே, போஜநம் செய்யுமுன் அந்தர்யாமியான பகவானுக்கு நிவேதனம், பரிஷேசனம், முதலியவையும் அங்கங்களாக அவ்வோ இடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஏகாதசி, அமாவாஸ்யை முதலிய தினங்களில் உபவாஸம் ஒரு வேளை போஜநம் முதலியவை ஏற்படும்போது சிலவேளைகளில் அநுயாகம் (போஜநம்) இல்லை. அப்போது பகவதாராதனம் (இஜ்யை) ஏழு அங்கங்களோடு முடிகிறது. வஸ்து இல்லாமையினாலும் போஜநத்துக்கு லோபம் நேரிடலாம். இந்த ஸமயங்களில் ப்ராணாஹுதி செய்யவேண்டாமா; அல்லது ஏதோ ஒருவிதமாய்ப் பண்ணவேண்டுமா என்பது ஸம்சயம். அப்போது (1) சிலர் பண்ணவேண்டுமென்கிறார்கள்; (2) சிலர் சாஸ்த்ரம் சொன்னவழியில் போஜநம் இல்லாமற்போனால், செய்யவேண்டாமென்கிறார்கள்.

ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில், 'கெநாபி நிமித்தேந விஹாவெஷ ஹொஜநெ ஷூணாஷிஹொத்ர மஜ்ஜவ:'— (ஒரு காரணத்தால் போஜந லோபம் நேரிட்டால் ப்ராணாக்நிஹோத்ர மந்த்ரஜபம் செய்யவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள்) என்று சொல்லி அதற்கு 'ஷூணாஷிஹொத்ஜ மஜ்ஜாம்ஷ விஹாவெஷ ஹொஜநெ ஜவெக' என்னும் வசநம் ப்ரமாணமாகக் காட்டப்பட்டபடியால் அவச்யம் செய்யவேண்டுமென்பார்கள். மந்த்ரஜபம் செய்தால் போஜநத்தில் ப்ரதானமான ப்ராணாஹுதி செய்தமாதிரியாய்விடும்; அதனால் உபவாஸாதிகள் போய்விடும்; அவற்றை விதிக்கும் சாஸ்த்ரங்கள் வீணாகும், என்பார்கள் மற்றவர். வேண்டுமென்பவர்கள், 'போஜநலோபம் நேரிட்டால் மந்த்ரஜபம் செய்யவேண்டும்' என்றதில் விசேஷமொன்றையும் குறிப்பிடாமல் பொதுவாய் ஜபம் விதிக்கப்பட்டபடியால் வ்யாப்தி ந்யாயத்தை அநுஸரித்து, 'சாஸ்த்ர மூலமாயாவது இல்லாமையினாலாவது போஜந லோபம் நேரிட்டால்' என்று ஸ்வரஸமாய் அர்த்தம் தோன்றுகிறபடியால் அவசியம் செய்யவேண்டியதென்கிறார்கள். 'இதனால் உபவாஸத்தை விதித்த சாஸ்த்ரம் வ்யர்த்தமாகிற தோஷத்துக்கு என்ன பரிஹாரம் ஆயிற்று' என்பார் மற்றவர். இதற்கு வேண்டுமென்பவர் பதிலுரைப்பது:—'ப்ராணாக்நிஹோத்ரம் செய்தமாதிரி ஆய்விடுமென்றதினாலேயே போஜநம் செய்தமாதிரியாகாது, தர்மஸூக்ஷ்மம் ஒன்றுண்டு. உபவாஸ தின ச்ராத்தத்தில் கர்த்தாவானவன் பத்ரு ப்ரஸாதத்தை சாப்பிடாமல் முகிரவேண்டியது மாத்திரம் என்பது விதி. அது சாப்பிட்டதுமல்ல, சாப்பிடாததுமல்ல, (அஶிதா நஶித ந்யாயம்) என்னும் ந்யாயம் ச்ருதியிலேயே சொல்லப்பட்டது. அப்படியே ஸாத்ய த்வாதசியில் ஜலபாரணையும். இவையெல்லாம் செய்ததும் செய்யா

நதும் (க்ருதாக்ருதம்) ஆகும். ஆகையால் ப்ராணாஹுதி மந்த்ரஜபத்தால் நிறைவேறுகிறது; போஜநம் செய்யாததால் உபவாஸவிதியும் வீணாகவில்லை'— என்று.

மத்யஸ்த த்ருஷ்டியாய்ப் பார்த்தால் 'ஸாயம் ப்ராதர்த்விஜாதீநாம் அஶநம் ஶ்ருதிசோதிதம். நாந்தரா போஜநம் குர்யாத் அக்நிஹோத்ரஸமோ விதி: ॥' (க்ருஹஸ்தர்களான த்விஜர்க்கு இரவிலும் பகலிலும் இரண்டு வேளை போஜநமென்றும், இடையில் போஜநம் செய்யக்கூடாதென்றும் ச்ருதி விதித்தது; இந்த விதி அக்நிஹோத்ர விதிக்குச் சமானம்) என்னும் வசநத்தினால், ப்ராணாக்நிஹோத்ரமும் அக்நிஹோத்ரத்துக்கு ஸமாநமாகையாலும், ஏகாதசி முதலிய தினங்களிலும் அக்நிஹோத்ரத்தை விடாமற் செய்வதாலும், ப்ராணாக்நிஹோத்ரமும் எப்போதும் விடத்தக்கதல்ல என்று ஏற்படுகிறது. போஜநம் பொதுவாய் உள்ளது. சாஸ்த்ரவிதியால் இதற்கு லோபம்நேரிடலாம்; வேறுகாரணத்தினாலும் போஜநம் தடைப்படலாம், என்னப்பட்டது. போஜந லோபம் நேரிட்டால் மந்த்ரஜபம் செய்யவேண்டுமென்னும் ப்ரமாணமும் காட்டப்பட்டது. ஆஹ்நிக க்ரந்த கர்த்தாக்கள் இதை ஒப்புகிறார்கள். 'ஒரு நிமித்தத்தால் போஜநலோபம் நேரிட்டால்' என்றது சாஸ்த்ரீய நிமித்தத்தையே குறிப்பிடும். இது உபவாஸவிதி முதலியவைகளையே சொல்லும். சாஸ்த்ரீய நிமித்தத்தால் போஜநலோபம் நேரிடும்போது மந்த்ரஜபம் செய்ய வேண்டுமென்றால் மற்ற லௌகிக காரணங்களைப்பற்றக் கேட்பானேன்? மேலும், 'விலோபே' என்பதற்கு 'லோபம் வந்தால்' என்றர்த்தமும், 'இன்ன நிமித்தத்தால்' என்றில்லாதபடியால் பொதுவாகவே அர்த்தம் பண்ணுவதே உசிதம். எல்லாக்கக்ஷிக்காரரும் ராத்ரிபோஜந ப்ரஸ்தாவத்தில் மந்த்ரஜபவிதியை ஒப்புகிறார்கள். அதனால் அமாவாஸ்யை முதலிய நிமித்தங்களால் ராத்ரியிலேயே போஜநலோபம் ஸம்பவிக்கக்கூடும் என்றதாயிற்று.

மறுபடியும், வேண்டாமென்பவர்கள் ஸம்ப்ரதாயத்தை ப்ரமாணமாக்கப் பார்ப்பார்கள். ஆனால் மற்றவர் அதை ஒப்பமாட்டார்கள். வெறும் ஸம்ப்ரதாயத்துக்கு ஆலஸ்யம், பராமர்சம் செய்யாமை முதலிய அநேக காரணங்களினால் தோஷமுண்டாகலாம். 'சாஸ்த்ர மூலமில்லாத ஸம்ப்ரதாயமும் ஸம்ப்ரதிபந்ந சாஸ்த்ர விருத்தமான ஸம்ப்ரதாயமும் ப்ரமவிப்ரலம்ப ஸம்பாவனையுண்டாகையாலே பாஹ்யதுல்யங்களாகையாலே அவிச்வஸநீயம்' என்று ஸ்ரீஸம்ப்ரதாய பரிசுத்தியில் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்ததைக் கவனிக்க வேண்டும்.

ஆகவே சாஸ்த்ரநிமித்தமாயாவது லௌகிக நிமித்தமாயாவது போஜந லோபம் நேரிட்டாலும் ப்ராணாஹுதி மந்த்ரஜபம் பண்ணவேண்டுமென்பதே ஸித்தாந்தம்.

ஸ்ரீ:

ஸ்ரீ விஷ்ணு ஷட்பதீ.

(ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யர் க்ருதி)

1. அவிநயமபநய விஷ்ணோ தமய மந: ஶமய விஷயம்ருகத்ருஷ்ணாம் ।
பூததயாம் விஸ்தாரய தாரய ஸம்ஸாரஸாகரத: ॥

ஸர்வ வ்யாபியான மஹா விஷ்ணுவே! உமது திருவடிகளில் வணங்காதிருக்கும் எனது அவிநயத்தைப் போக்கியருளும்; மனதுக்கு சாந்தியைக் கொடுத்தருளும்; இந்திரியங்களால் அநுபவிக்கும் விஷய ஸுகங்களில் உண்டாகும் ஆவலை நிவ்ருத்தி செய்தருளும்; ஸர்வ பூதங்களிடத்தும் எனக்குத் தயை பெருகும்படி அளித்தருளும்; ஓய்வில்லாத பிறப்பு இறப்பு என்னும் ஸம்ஸார ஸமுத்திரத்தினின்றும் என்னை மீட்பித்தருளும்!

2. திவ்யதுநீமகரந்தே பரிமலபரிபோகஸச்சிதாநந்தே ।
ஸ்ரீபதிபதாரவிந்தே பவபயகேதச்சிதே வந்தே ॥

தேவநதியாகிய கங்கையின் மகரந்தத் தூள்களை யுடையவையாயும், திவ்ய கந்த முடையவையாயும், ஸச்சிதாநந்த ஸ்வரூபிகளாயும், ஸம்ஸார பயமாகிற துக்கத்தைப் போக்குகின்றனவாயு முள்ள ச்ரிய:பதியின் திருவடிகளிரண்டையும் நமஸ்கரிக்கின்றேன்.

3. உத்த்ருதநக நகபிதநுஜ தநுஜகுலாமித்ர மித்ரஶஶித்ருஷ்டே ।
த்ருஷ்டே பவதி ப்ரபவதி ந பவதி கிம் பவதிரஸ்கார: ॥

கோவர்த்தன கிரியைத் தாங்கினவனே! குலபர்வதங்களைச் சேதித்த இந்திரனுக்கு இளையவனாயவதரித்து அவனையும் தேவர்களையும் காப்பாற்றினவனே! அரக்கர் குலத்தை அழித்தவனே! ஸூர்யனையும் சந்த்ரனையும் திருக்கண்களாயுடையவனே! உம்முடைய கடாக்ஷமுண்டானால் ஸம்ஸாரத்தின் துழிவில்லாமற் போகுமோ?!

4. மத்ஸ்யாதிபிரவதாரை:, அவதாரவதாவதா ஸதா வஸுதாம் ।
பரமேஶ்வர பரிபால்யோ பவதா பவதாபபீதோऽஹம் ॥

மத்ஸ்யம் முதலிய அநேக அவதாரங்களைச் செய்து உலகத்தை ரக்ஷிப்பவரன்றோ தேவரீர்! ஸர்வேச்வரனே! ஸம்ஸார தாபத்தினால் பயமடைந்த அடியேனும் தேவரீராலேயே யன்றோ ரக்ஷிக்கப்படவேண்டும்!

5. ദാമോദര ഗുണമന്ദിര സുന്ദരവദനാരവിന്ദ ഗോവിന്ദ ।
ഭവജലധി മഥന മന്ദര പരമം ദര മപനയ ത്വം മേ ॥

உரவிடையில் கயிற்றினால் கட்டுண்டு நின்றவனே! ஸமஸ்த கல்யாணகுணங்களுக்கும் இருப்பிடமானவனே! தாமரைபோன்ற அழகிய திருமுகத்தை யுடையவனே! ஸர்வஸுலபனாய் ஸர்வரக்ஷகனாயிருந்துள்ள ஹே கோவிந்தா! ஸம்ஸாரக்கடலைக் கடையும் மந்தர பர்வதமே! (உன்னையடைவதற்கு ப்ரதிபந்தகங்களான) என் இருள்தரும் மஹாபாபங்களையெல்லாம் போக்கியருளாய்!

6. സത്യപി ഭേദാപഗമേ നാഥ തവാഹം ന മാമകീനസ്ത്വം ।
സാമുദ്രോ ഹി തരംഗഃ ക്വചന സമുദ്രോ ന താരംഗഃ ॥

ஜீவ ஈச்வரபேத மொழிவதென்று ஒன்று உண்டேயாகிலும் தேவரீரே யன்றோ எனக்கு நாதன்! ஸமுத்ரத்திலிருந் தல்லவோ அலையுண்டாவது! எக்காலத்திலாவது எவ்விடத்திலாவது அலைகளின்றும் ஸமுத்ர முண்டாவதென்பது ஸம்பாவிதமோ!?

7. നാരായണ കരുണാമയ ശരണം കരവാണി താവകൗ ചരണൗ ।
ഇതി ഷട്പദീ മദീയേ വദനസരോജേ സദാ വസതു ॥

'(ஸர்வ ப்ரஞ்சத்துக்கும் காரணனாய் ஆதாரமாய் ரக்ஷகனாருக்கும்) நாராயணனே! கருணையுருவே! தேவரீர் திருவடிகளிரண்டையும் சரணமாக அடைகின்றேன்'. இந்த ஆறு மொழிகளும் எனது முகாரவிந்தத்தில் எப்போதும் நிலைத்திருக்கட்டும்.

இவற்றில், ஸமஸ்தகல்யாண குணங்களையுமுடைய ஸ்ரீய:பதியான விஷ்ணுவே ஸர்வஜகத்காரணன் ஸர்வேச்வரன் ஸர்வரக்ஷகன் ஸர்வஸுலபன் என்பதும், அவன் திருவடிகளில் வணங்குவதே பரமபுருஷார்த்தமென்பதும், அதற்கு ஸம்ஸாரபந்தமே விரோதி யென்பதும் அதைக்கடப்பதற்கு உபாயம் கருணைக் கடலான அவன் திருவடிகளில் சரணாகதி பண்ணுவதே என்பதும், அத்வைத வாதத்தின்படி ஜீவனும் ஈச்வரனும் ஒன்றாகும் ஸந்தர்ப்பம் உண்டாகக் கூடுமென்றாலும் பகவானே சேஷி, ஜீவன் சேஷபூதன், பகவானல்லது ஜீவனுக்கு வேறு தஞ்சமில்லை என்பதும், ஸ்பஷ்டமாக ச்சொல்லப்பட்டன. (—பத்.)

ஸ்ரீ:.

கடித ஸங்க்ரஹம்.

ஸ்ரீரங்கம் பென்ஷன் ஸுபர்வைஸர் 'விசிஷ்டாத்வைத ஸர்வமதகேஸரீ' ஸ்ரீ.உ.வே. திருமாலி ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி எழுதிய நீண்டகடிதத்தில்' ஸம்ஸ்க்ருத பரிசயமில்லாத லௌகிக ஆஸ்திகர்கள் இங்கிலீஷிலும் த்ராவிடத்திலுமுள்ள க்ரந்தங்களின் மூலமாகவே தேஹ ஆத்ம ஸம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கும் ப்ரயாஸத்தை ஸ்வாநுபவ பூர்வமாகச் சொல்லித் தான் பரிசீலித்த உலகின் கண்ணுள்ள மதங்கள் 64-ல்.

'வேதாந்த மதத்தின்படியிலுள்ள 26-தத்வங்களில் பரமாத்மா ஜீவாத்மாக்களை நீக்கி மீதி 24-தத்வங்களை லோக ஸ்ருஷ்டிக்குக் காரணமென்று ஒப்புக்கொண்ட கபில மதம் முதல் சூன்யவாதி வரையில் ஏற்பட்ட நாஸ்திகமதங்கள் 43; ஐரோப்பா முதலான கண்டங்களில் ஏற்பட்ட நாஸ்திக மதங்கள் 14; ஹிந்துமதம் கிருஸ்து மதம் முதலான பூலோகத்திலுள்ள ஆஸ்திக மதங்கள் 7. எல்லாவற்றிற்கும் மேலான ஈச்வரனை ஒப்புக்கொண்டவை ஆஸ்திகங்கள். மற்றவை நாஸ்திகங்கள்.

'இவைகள் எல்லாவற்றையும் ஒத்துப்பார்த்ததில் ஸித்தாந்தத்துக்கும் பூலோக அநுபவத்துக்கும் ஒத்து நிராக்ஷேபமாய் பூலோக பரலோக விஷயமாய்க் கேட்கும் எவ்விதக் கேள்விகளுக்கும் பதில் சொல்லக்கூடியதாய்த் தகுந்த ப்ரக்ரியை அவதாரிகை நிபந்தனைகளையுடைய மதம், வேதாந்தத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் ப்ரவர்த்திப்பித்த ஸ்ரீவிசிஷ்டாத்வைத அல்லது தத்வத்ரயரஹஸ்யமே உயர்ந்ததென்றும், இந்த தத்வத்ரயமில்லாமல் ஒரு ஸித்தாந்தமும் நிலைநிற்காதென்றும் முடிவான அபிப்ராயத்தை யடைந்தேன்'

என்று முதலில் வரைந்தார். இந்த ஸ்வாமி அபிப்ராயத்தில்,

'அத்வைத ஸித்தாந்தப்படி அநுஷ்டிக்கிறவர்கள் பூலோகத்தில் ஒருவருமில்லை. அது மனோவ்யாபாரமான ஒரு ஆகாசத்தாமரை. அது விஷயமாய்ப் பேசுகிறவர்கள் விசிஷ்டாத்வைதிகளான சைவர்களே. ஜாக்ரதவஸ்தையில் ஸகுண ப்ரும்ம அதிகாரவரம்புக்குட்பட்ட காலமாகிய லீலாவிபூதியான பூலோகத்தில் த்ரிமதஸ்தர்களும் கர்ப்பாதானம் முதல் தஹநம் வரையில் நித்ய நைமித்திக கர்மங்களை ஒரே ரீதியாய்ச்செய்து வருகிறபடியால், அவர்களெல்லோரும் விசிஷ்டாத்வைதிகளே.'

பின்னர், அத்வைத விசிஷ்டாத்வைத மதங்கள் ஸந்திக்கும் இடங்கள் என்றும் ஸ்ரீபாஷ்யக்காரர் அத்வைதத்தையே ஒப்புக்கொண்டவரென்றும் சில ப்ரமுகர்கள் எழுதியதை நிராகரித்து தீபிகையில் சில மாதங்களுக்கு முன் வெளியிடப்பட்டிருந்ததை அநுவதித்து, இந்த ஸ்வாமி மேற்கூறுவது இங்ஙனே.

'ஸ்ரீசங்கரர், ப்ரும்ம ஸூத்ரம் முதல் அதிகரணம் முதல் ஸூத்ரத்தில், அத, அதஃ, என்கிற பதங்களுக்கு அர்த்தமில்லை என்றும், மங்களகரத்தையாவது ஒன்றன்பின் ஒன்று நடக்கவேண்டிய விதியையாவது காட்டவில்லையென்றும், வேதாத்யயனமும் கர்மங்களும் அநித்யங்களாகையால் (தைத்திரீய உபநிஷத் வ்யாக்யானத்திலும் இதே அபிப்ராயம்) ஸாதனசதுஷ்டயமே ப்ரும்ம ஜ்ஞானத்துக்குப் போதுமானதென்றும் சொல்லுகிறார். ஒரு பாஷையிலும் அர்த்தமில்லாத பதங்கள் ஏற்பட்டிருக்குமா? அப்படிப்பட்ட பதங்களை விஷ்ணுரூபரான வ்யாஸர் வேதாந்த ரஹஸ்யத்தில் உபயோகப்படுத்தியிருப்பாரா?

அபௌருஷேய பதங்கள் ப்ரும்ம ஜ்ஞானம் அவச்யமென்று விட்டபடியால் ப்ரும்மம் நித்யமாயிற்று. அதை த்யானம் பண்ணுகிறவனும் நித்யமாகவேண்டும். ஏனெனில் த்யானகால மின்னதென்று குறிப்பிடப்படவில்லையாதலால். அவித்யையினால் மூடப்பட்டு ஜீவனென்று பெயர்கொண்ட காலத்தில் உபாஸிப்பதென்றால், யார் யாரை உபாஸிக்கிறது? ஜீவனான ப்ரும்மம் தன்னைத்தானே த்யானம் செய்யவேண்டியதானால் அந்த ஜீவனுக்குள்ள ப்ரும்ம ஸ்வஸ்வருபமாகிய ஜ்ஞானம் அதைவிட்டு எப்படிப்போகும்? அவித்யையின் அதிகாரததினால் போனதானால் சேதனஸ்வரூபமும் நித்யத்வமும் மாறிவிடுமே? அவித்யையினால் மறைவுமாத்திரம் ஏற்பட்டதென்றால் ஸ்வஸ்வருபமும் ஜ்ஞானமும் நிலைத்துத் தீரவேண்டும். அப்போது தன்னைத்தானே த்யானம் செய்யவேண்டுமென்பது அஸம்பாவிதம். ஆகையால், ஏகனும் ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தியுடையவனுமான ப்ரும்மத்தை, அதைமுதலில் ஒப்புக்கொள்ளாத அவித்யை என்கிற ஒரு அசேதனம் எப்படி மறைக்கக் கூடும்?

‘இதைப்போன்ற பல ஆக்ஷேபணைகளுண்டு. லீலாவிபூதி ஸகுண ப்ரும்ம காலமாய் விசிஷ்டாத்வைதமாய் விட்டபடியாலும், மஹாப்ரளயத்தில் த்யானம் கூடாதாகையாலும், நிர்க்குண ப்ரும்ம த்யான காலம் ஏற்பட வழியில்லை.’ என்று,

அதன்மேல் அத, அத:, என்னும் பதங்களுக்கு ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த பொருளையும், முதலதிகரணத்தில் சின்னபூர்வபக்ஷம், பெரிய பூர்வபக்ஷமென்னுமிடங்களில் அருளிச்செய்திருப்பவைகளையும், ஐரோபிய தத்வவாதிகளும் இரண்டு தத்வங்களையே (Dualism) அங்கீகரித்திருப்பதையும், அத்வைதிகள் அபேத ச்ருதிகளை மாத்திரம் நம்பி, சந்தோக்ய உபநிஷத்தில் ஓங்கார விவரணம் ப்ரும்மத்துக்கு ஜ்ஞானசக்தி க்ரியாசக்தி முதலியவையிருக்கிறதென்பது, முதலிய அநேக ப்ரகரணங்களுக்கு விரோதமாக நிர்க்குண ப்ரும்மமென்று அர்த்தமில்லாத பதத்தை உபயோகப்படுத்துவதையும், பகவத்கீதையில் அநேக விடங்களையும் பராமர்சித்து, முடிவாக ‘தத்வத்ரயமான பகவத் ராமாநுஜமதமே எல்லாவற்றிலும் உயர்ந்ததென்றும், பந்தத்திலிருந்து விடுபட்டு மோக்ஷமடைய இது வழியே தவிர வேறில்லை யென்றும்’ தாம் துணிந்து விட்டதைச் சொல்லி மேலே’

‘ப்ரும்மம் தானேயாவது அவித்யைக் குட்பட்டதாவது ஜகத்தாகப் பரிணமித்து விட்டானென்பது வ்யவஹாரத்துக்கு நிற்காதென்றும் அப்படி ஒப்புக்கொண்டால், அது தனக்காவது மற்றவர்களுக்காவது யாதொரு ப்ரயோஜனத்தையும் பண்ணாததுடன், ஜர்மானிய தத்வவாதி மாக்ஸ் மூலர் கூறியபடி பூலோகத்தில் தர்மங்களழிந்து அதர்மங்கள் மேலிட்டு ஒருவரும் ஒன்றுக்கும் கட்டுப்படாத நிலைமை வந்து விடுமென்றும் தீர்மானித்துவிடலாம். ஸ்ரீசங்கரர், பௌத்த நாஸ்திக மதங்களைக் கண்டிக்க ஏற்படுத்திய வ்யவஹாரங்களே அத்வைதங்களாகப் பாராட்டப்படுகின்றனவே தவிர அவர் அத்வைத அபிப்ராயம் கொண்டவரல்லவென்பதும் நிச்சயம்.’

என்ற தீர்மானத்துடன் கடிதத்தை முடித்திருக்கிறார்.

புஸ்தக விமர்சம்.

(பத்ராதிபர்)

ஸ்ரீபாஷ்யம், ச்ருதப்ரகாசிகா ஸஹிதம்; தமிழ்மொழி பெயர்ப்பு.

இஃது ‘ஸ்ரீரங்கம் ஸ்ரீபாஷ்யம் மொழிபெயர்ப்புச் சங்க’த்தாரால் ப்ரசுரம் செய்யப்படுகிறது. திருச்சி ஸென்டு ஜோஸப் காலேஜ் ஸம்ஸ்க்ருதபண்டிதர் வித்வான் ஸ்ரீ. உ. வே. தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமியினால் இம்மொழி பெயர்ப்பு இயற்றப்படுகிறது. இதன் முதல் ஸஞ்சிகை நமது பார்வைக்கு வந்திருக்கிறது.

ஆஸ்திகர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்ரீபாஷ்யகாரர் முதன்மையாக நியமித்தருளிய கைங்கர்யம் ‘ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்’ என்பது. க்ரந்தம் லுப்தமாகாமல் அதை ப்ரசுரம் செய்து பலவிடங்களில் நிலைத்திருக்கும்படி செய்வதும், அதன் விவரணங்களான வ்யாக்யானங்களை வெளியிடுவதும், ஆச்ரயித்த சிஷ்யர்களுக்கு ப்ரவசநம் செய்வதும் போல் எல்லோரும் ஸாதாரணமாய் வ்யவஹரிக்கும் பாஷையில் அதை மொழிபெயர்ப்பதும் இக்கைங்கர்யத்தில் உட்பட்டதென்னத் தட்டில்லை. ஸம்ஸ்க்ருத பாஷை இன்னமும் நமது நாட்டில் ஜீவத்பாஷையாக அப்யஸிக்கப்பட்டு வருகிறதேயாகிலும், நமது பார்வையிலேயே அதைக் கற்பவர் மிகவும் குறைவாகி வருகிறார்கள். ஸுமார் சென்ற 15-வர்ஷங்களாக ஆங்கிலக் கலாசாலைகளில் தேசிய பாஷையொன்றை நிர்ப்பந்தமாகக் கற்கவேண்டுமென்னும் நியமம் எடுபட்டுப் போய்விட்டதால், நம்மவர்க்கு ஆங்கிலத்தி லல்லது பேசவும் அர்த்தங்களை யறிந்துகொள்ளவும் சக்தி அநேகமாக அற்றுப்போய்விட்டது. தமிழில் சொன்னாலும், இங்கிலீஷ் கலந்தாவது, இங்கிலீஷ் பாஷையில் படித்திருக்கிற விஷயங்களையும் நினைவுகளையும் அடியொத்தியாவது சொன்னா லன்றி எதையும் உள்ளபடி தெரிந்துகொள்ளும் யோக்யதையைக் காண்பது அரிதாய்விட்டது. தவிரவும் நமது அத்யாத்ம சாஸ்த்ர க்ரந்தங்களெல்லாம் வெகுவாய் ஆங்கிலத்தில் வெளியாய்விட்டன. கால ஸ்வபாவத்தால் தேசாந்தரப்படிப்பிலும் லௌகிக ப்ரவ்ருத்திகளிலும் ஈடுபட்டு உழலுகிறவர்களுக்குக் கூட நமது மதம் என்னும் அபிமானம் மட்டும் சிறிது மிகுந்திருந்தா

லும், அதை க்ரமப்படி ஸம்ஸ்க்ருத பாஷையினாலேயே கற்பதற்கு சக்தியும் ஸௌகர்யமு மில்லாததால், அத்தகையவர்கள் ஆங்கிலப் புஸ்தகங்களின் உதவியையே நாடுகிறார்கள். ஆனால் அவை தகுந்த ஸாதனங்களாவதில்லை; மற்றும் விபரீத அர்த்தங்களையே பலவிடங்களில் ஊட்டுகின்றன. ஆகையால் ஸம்ஸ்க்ருதத்துக்கு உறவுமுறையாய் வேதாந்தார்த்தங்களை விசதமாக்குவதற்கு ஹேதுவாக ஆழ்வார்களாலும் ஆசார்யர்களாலும் அனுதியாக அங்கீகரிக்கப்பட்ட அகஸ்த்ய பாஷையாகிய தமிழில் நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களை ஸம்ப்ரதாய முறையில் சாஸ்த்ரம் படித்த வித்வான்களைக்கொண்டு மொழி பெயர்ப்பிப்பது மிகவும் அவச்யமும் ச்லாக்யமுமான கைங்கர்யமே. இதற்கு வேண்டிய த்ரவ்யத்தைச்சேர்த்து இதை நிறைவேற்றி வைக்க முன்வந்திருக்கும் ஆஸ்திக ஸ்ரீமான்களுக்கு ஸ்ரீவைஷ்ணவர்களுடைய க்ருதஜ்ஞதை சொல்லத்தக்கது.

சாஸ்த்ர க்ரந்தங்களை எல்லோரும் தெரிந்துகொள்ளும்படி மொழிபெயர்ப்பது எளிதல்ல. ஆகிலும் கூடியமட்டில் ஸாமான்யபாஷையில் விவரித்தாலல்லது படும் பாடு பலமுடைத்தாகாது. ஸம்ஸ்க்ருத வாசகங்களையே தமிழ் எழுத்தில் எழுதிய மாதிரி செய்யப்படும் மொழிபெயர்ப்புகள் ஒருவருக்கும் உதவா. ஸம்ஸ்க்ருதத்தில் வழங்கும் ஸமாஸ (கூட்டுப்) பதங்களைத் தமிழில் விரித்துரைக்கவேண்டியதும், தர்க்கம் முதலிய சாஸ்த்ர பரிபாஷை வசனங்களை சாஸ்த்ரபரிசய மில்லாதவர்களுக்கு விளங்கும்படி சொல்லவேண்டியதும், மொழிபெயர்ப்பானது வெறுமனே ப்ரதிபதமாக மட்டிலில்லாமல், தமிழ்நடையின் ஸ்வபாவத்தை அநுஸரித்திருக்கவேண்டியதும், இவைபோன்ற மற்றும் சில அம்சங்களும் பொதுவாய் கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள்.

ஸ்ரீ. உ. வே. தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி இவைகளைக் கூடியமட்டில் கவனித்தே இந்தத்தமிழ் மொழிபெயர்ப்பை இயற்றியிருக்கிறார் என்பது முதல் ஸஞ்சிகையை வாசிப்பதினால் விளங்குகின்றது. அவச்யமான விஷயங்களை விளக்கும்படி டிப்பணிகளை (footnotes) ச்சேர்த்திருப்பது ஓர் இன்றியமையாத உபகாரம். இனி வெளிவரும் ஸஞ்சிகைகளில் தமிழ்நடையும் தமிழ்விவரணமும் வாசிப்போர்க்கு இதைவிட அதிக ஸுலபமாகத் தெரிந்துகொள்ள உதவும்படி மொழிபெயர்ப்புச் செய்யும்படி அந்த ஸ்வாமியை ப்ரார்த்திக்கின்றோம்.

இப்புத்தகம் அச்சிடப்பட்டிருக்கும் மாதிரி இதற்கு உபயோகித்திருக்கும் காகிதம், முதலியவையெல்லாம் த்ருப்திகரமாகவே இருக்கின்றன. விலையும் வெகு ஸரஸம் தான்.

186736

ஸ்ரீ

உபய வேதாந்தம்.

(தொடர்ச்சி.)

(ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி.)

இனி உபயவேதாந்தங்களும் ஒரே பொருளைச் சொல்லுகின்றன என்கிற விஷயம் நிரூபிக்கப்படுகிறது. அதில் ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தில் ஜகத்திற்கு உபாதான காரணமாயும், நிமித்தகாரணமாயுமுள்ள ஸமஸ்த சேதநா சேதநங்களையும் சரீரமாக உடைய ஸ்ரீமாநான நாராயணனே பரதத்வமென்றும், அவனே பக்தி ப்ரபத்திகளாகிற உபாயங்களாலே ப்ராப்யனென்றும், அவனுடைய குணாநுபவத்தால் உண்டான ப்ரீதியினால் செய்யப்பட்ட கைங்கர்யமே பலம் என்றும் நிரூபிக்கப்படுவதுபோல், திருவாய்மொழியில், "நாமனிவ" னென்று ஜகத்திற்கும் ஈச்வரனுக்கும் ஐக்யத்தைச் சொல்லி அதற்கு நிபந்தநம் சரீராத்மபாவமென்று, "உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்து" என்று நிரூபித்தும், 'இவையு மவையு' என்கிற பாட்டில், 'ஆகியுமாக்கியு' மென்று உபாதாந காரணத்வத்தையும், நிமித்தகாரணத்வத்தையும், ப்ரதிபாதிக்கையாலும், "எல்லையி லன்னலம் புல்குபற்றற்றே," என்று ப்ரீதி ரூபத்தை அடைந்ததாய் நிரந்தரஸ்ம்ருதி ரூபமாய் வைராக்யத்தாலே ஸாதிக்கப்படுவதான பக்தியோகத்தை நிரூபித்தும். 'வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே,' என்று ப்ரபத்தியை நிரூபித்தும் அதில் உள்ளடங்கிய ஸ்வரூப பர பல ஸமர்ப்பணங்களில், 'உம்முயிர் வீடுடையானிடை வீடு செய்மினே' என்று ஸ்வரூப ஸமர்ப்பணத்தையும், "களைவாய்துன்பம் களைபாதொழிவாய்களைகண் மற்றிலேன்" என்று பர ஸமர்ப்பணத்தையும், 'தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே' என்று பல ஸமர்ப்பணத்தையும்; 'நாகணைமிசை நம்பி ரான் சரணே நமக்கு' என்று உபாயப்ரார்த்தனையையும், நிரூபித்து, இவைகளுடைய பலமாக, 'உனது பாலே போய் சீலில் பழுத் தொழிந்தேன் அம்மான் சீர் கற்பன்,' என்று குணாநுபவத்தையும், 'ஒழிவில்காலமெல்லாம்' என்கிறபாட்டில் கைங்கர்யத்தையும் நிரூபிக்கையாலே ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தோடு த்ராவிடவேதாந்தம் ஏககண்டம்.

இப்படியிருந்துள்ள உபயவேதாந்தங்களின் அத்யயனம் அத்யாபநம் ஜ்ஞாநாநுஷ்டாநங்கள் ஆவச்யகங்கள், (யஸ்ய வேதஸ்ச வேதீ ச) என்கிற ச்லோகத்தின்படி பொதுவாய் வேதசப்தத்தினால் உபயவேதத்தையும், வேதம் என்று பகவதாராதனரூபமான யஜ்ஞத்தையும் சொல்லுகையாலும், விசேஷித்துத் திருவாய்மொழியை அறியக் கற்றுவல்லார் வைஷ்ணவரென்று அத்யயன ஜ்ஞாநாநுஷ்டாநங்களினாலே வைஷ்ணவத்வ ஸித்தியைச் சொல்லியிருப்பதாலும், உபயவேதாந்தங்களுடையவும் அத்யயனாதிகள் ஆவச்யகங்கள். மேலும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பகவத் பாகவத குணாநுபவ கைங்கர்யங்கள் புருஷார்த்தங்களாகையாலும் அதில் குணாநுபவத்திற்கு வேதாந்தம்போல் குணத்தில்

பரம பரவசமானவர்களுடைய குணாநுபவ பரீவாஹரூபமான ப்ரபந்தம் முக்ய ஸாதனமாகையாலும், அதிலும் ப்ரதானமான பரமதநிராகரணத்தை முன்னிட்டுச் செய்யும் ஸ்வமத ஸ்தாபனம், “ நாடாத மலர் நாடி ” என்கிறபாட்டின்படி ஆத்ம ஈச்வரனுக்கு ஆத்ம புஷ்ப ஸமர்ப்பணரூபமான கைங்கர்யமாகையாலும், ‘ தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்,’ என்று பாகவத கைங்கர்யமாயிருப்பதாலும், ‘ [illegible] ’ என்று ஸ்வயம் புருஷார்த்தமா யிருப்பதாலும் கீழ்ச் சொன்ன அத்யயனாதிகள் அத்யந்தம் ஆவச்யகங்கள்.

ஒரு ஸ்ரீவைஷ்ணவ ப்ரமுகரின் நிர்யாணம்.

மதுரையில் ராமநாதபுரம் தேவஸ்தானம் ஸம்ஸ்க்ருத வித்யாலயத்தின் ப்ரதான ப்ரவர்த்தகரான வித்யாநிதி ஸ்ரீ. உ. வே. ஆர். க்ருஷ்ணமாசார்யர் எம். ஏ., ஸ்வாமி சிலதினங்களே உடம்பு அஸ்வஸ்தமாயிருந்து பரமபதமடைந்து விட்டாரென்பதைக்கேட்டு மிகவும் வருந்துகின்றோம். மேல்நாட்டுக் கல்வியில் பயின்று நமது பூர்வீக வித்யையில் ஈடுபடும் சிலரே ஆன லௌகிகர்களில் இந்த ஸ்வாமி ஒருவர். இவர் சென்னை ராஜதானி ஸம்ஸ்க்ருத பாடசாலைகளின் ஸூபரிடென்டாக விருந்த காலத்தில் பலவிடங்களில் ஸம்ஸ்க்ருத வித்யாலயங்கள் ஏற்படுவதற்கு காரணபூதராயிருந்தார். ஸம்ஸ்க்ருத ஸாஹித்யாதிகளில் அதிக நிபுணர். அநேக க்ரந்தங்கள் இவரால் எழுதப்பட்டிருக்கின்றன. ‘ ஸஹ்ருதயா ’ என்னும் ஸம்ஸ்க்ருத பத்ரிகையைச் சென்ற 27-வர்ஷங்களாக வெகு திறமையாக நடத்திவந்திருக்கிறார். வங்காளத்தில் நவத்வீப மென்னு மிடத்திலுள்ள ப்ரஸித்த ஸம்ஸ்க்ருத ஸர்வகலாசாலையின் நிர்வாஹகர்களான பண்டிதர்களின் ஸமாஜத்தில் இந்த ஸ்வாமிக்கு இவர் வைதுஷ்யத்தை மெச்சி வித்யாநிதி என்னும் பிருது அளிக்கப்பட்டது. தென்னிந்தியாவிலுள்ள அநேக ராஜாங்கங்களில் ஸம்பாவனைப் பெற்றவர். வடதேசங்களில் நடந்த பல ஸம்ஸ்க்ருத ஸம்மௌனங்களில் இவர் அக்ராஸநம் வஹித்திருக்கிறார். ராமநாதபுரம் தேவஸ்தான பாடசாலைக்கு இவர் அத்யக்ஷரானது முதல் அதில் அநேக சீர்திருத்தங்களைச் செய்வித்திருக்கிறாரென்றும், அதை ஒரு குரு குலமாகச் செய்து வித்யார்த்திகளுக்கு வைதிக ஆசாராதிகளில் ச்ரத்தையைப் பெருக்கும்படியான முறைகளை நன்றாய்க் கவனித்து வந்திருக்கிறாரென்றும், இன்னும் அக்கலாசாலையின் அபிவ்ருத்திக்காக வேறு சில ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தாரென்றும் அறிகிறோம்.

இந்த ஸ்வாமியின் நிர்யாணத்தால் அக்கலாசாலைக்கு மட்டுமன்றியே நமது நாட்டின் ஸம்ஸ்க்ருதாபிவ்ருத்திக்கும், பெருங்குறைவு உண்டாய்விட்டது என்னத் தட்டில்லை. இவர் வியோகத்தால் வருந்துகின்ற இவருடைய குடும்பத்தாருக்கு நமது மனப்பூர்வமான அநுசோசநத்தைத் தெரிவிக்கிறோம்.—பத்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத்ராமாநுஜ மதாபிவ்ருத்தி

(ஸ்ரீ. உ. வெ. தி. ஈ. சடகோபாசார்யர் பி.ஏ. பி. எல்.,)

ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்தம் கங்காப்ரவாஹம் போல் ‘[illegible]’ என்கிறபடியே ஸர்வேச்வரன் தொடக்கமாய் அவிச்சின்னமாயுள்ள வாசார்ய பரம்பரை வழியாக வந்து எல்லோரும் உபஜீவிக்குமாறு பஹுமுகமாகப் பரவி, ஸம்பந்த மாத்ரத்தால் பவித்ரமாக்கத்தக்க விசுத்தியும் ஆஸ்வாத மாத்ரத்தால் இடைவிடாது மேன்மேலும் விரும்பத்தக்க மாதுர்யமும், இழிந்திடுபட்டவர்களுக் கொப்பிலாப் பெரும் பெருகிய பரமபுருஷார்த்தத்தை ஸாதிக்கவல்ல மகிமையும் பொருந்தியுள்ள தென்பது யதார்த்தாநுபவத்துடன் பராமர்சிப்பவர்கள் ஸாக்ஷாத்கரிக்கத் தக்க விஷயம். இது பற்றியே இவ்வுண்மை யறிந்த சான்றோர் ‘ ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம் ’ (ராமாநுஜருடைய திவ்யாஜ்ஞை மேன்மேலும் வ்ருத்தியடையட்டும்) உன்னிடம் ‘ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா திகந்தவ்யாபிநீ பூயாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ ’ (ராமாநுஜார்யருடைய திவ்யாஜ்ஞையானது தினந்தோறும் வளரும் ப்ரகாசத்தோடு கூடியதாய் எல்லா திக்குகளிலும் பரவட்டும். அது உலகத்தின் நன்மையைக் கருதியதன்றோ!) என்றும் பலவாறாக மங்களாசாஸநம் செய்துளர். இது கேவலம் ‘ ஸர்வஸ்ய ஸ்வம் ஸ்வம் குலவித்யா பஹுமதா ’ (எவருக்கும் தங்கள் குலவித்யையே அபிமான விஷயமாகிறது) என்கிற உலக வழக்கத்தை யநுஸரித்துக் ‘ காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு ’ என்கிறபடி ஸ்வீயாபிமான ப்ரயுக்த மல்ல வென்பது மத்யஸ்த த்ருஷ்டியுடன் தத்வாந்வேஷணம் பண்ணும் புத்திமான்களுக்குச் செம்மையே புலப்படும். மதாந்தரங்களில் தெளியவொண்ணாத தத்வவிஷயத்தில் ஜனிக்கும் எல்லா ப்ரகாரமான ஸம்சயங்களும் நம் ஸித்தாந்த யாதார்த்யத்தைக் கண்டறிந்தவர்கட்குத் தெளிவாகின்றன வென்பதும், அவ்வித முதிக்கும் தத்வஜ்ஞானத்துக்கு ஸாதகமாயும் அதன் பலமாயுமுள்ள வாசார ப்ரக்ரியை அவ்வோ வதிகாரிகளுக்குத் தக்கபடி நம் ஸம்ப்ரதாயத்தில் தான் வரையறுக்கப்பட்டிருக்கின்றதென்பதும், இதுவே ச்ருதி ஸ்ம்ருதி முதலான பஹுமுகமாயுள்ள பகவத்வசனங்களுக்கும், அவைகளை யநுஸரித்து ப்ரவ்ருத்தித்த வைதிக சாஸ்த்ரங்களு

க்கும் அநுகுணமாயுள்ளதென்பதும், இது காரணமாக விதுவே ஸத்ஸம்ப்ரதாயமென்கிற அஸாதாரணமான பெயருக்கு ஏகலக்ஷ்ய மென்பதும் ப்ராஜ்ஞர்களுக்கு ஸம்மதம்.

இப்படிக் கெல்லா விதத்திலு மேற்றமுள்ள ஸர்வஹிதமான ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ப்ரதாயங்கள் ஸூர்யகிரணங்கள்போல க்ஷணே க்ஷணே மேன்மேலும் ப்ரஸரித்துத் திக்கெட்டுக்களிலும் வ்யாபிகளாயிருக்க வேண்டியதுபோக இக்காலத்தில் குடத்திலிட்ட விளக்கைப்போல் ப்ரசாரக் குறைவடைந்திருப்பதைப் பார்க்க மனஸ்ஸுக்கு அதிகமான விஷாதமுண்டாகிறது. இவ்வதிசோசநீயமான தசையை நிவர்த்திக்க யத்தனப்படாமல் உபேக்ஷை செய்யும் பக்ஷத்தில் காலக்ரமத்தில் இவ்வநர்க்கமான ஸம்ப்ரதாயம் மாலிந்யத்தை யடைந்து ஸூர்யாஸ்தமனத்துக்குப் பிறகு லோகம் அந்தகாரத்தில் மூழ்குவது போல் ப்ரஜைளுக்கு ப்ரகாசம் லுப்தமாய் தத்வநிச்சயமில்லாமல், வ்யவஸ்தா பங்கமும் அதுவழியாக ஸர்வக்ஷோபமும் ஸம்பவிக்கும். ஆகையால் இந்த நிரதிசயமான ஸித்தாந்த கல்பவ்ருக்ஷம் அடியோடு பட்டுப் போவதற்குமுன் யுக்தமான தாரண போஷணோபாயங்களைத் தேடி மறுபடியுமிதை உறுதியான கிளைகளோடு கூடியதாயும் பத்ரபுஷ்ப பல ஸம்ருத்திகளையுடையதாயும் மேன்மேலும் அபிவ்ருத்தியில் நோக்கமுடையதாயும் செய்விக்கவேண்டியது லோக ஹிதைஷிகளான ஆஸ்திகரெல்லாருக்கும் அத்யந்தமவச்யமான வ்யாபாரமென்று நிச்சயிக்கத்தக்கது.

இந்த துர்த்தசைக்குப் பரிஹாரம் தேட வாரம்பிப்பதற்குப் பூர்வாங்கமாக இதிவ்விதம் ஸம்பவித்த காரணம் என்ன வென்பதை யறியவேண்டும். வ்யாதியின் மூல மறிந்து தான் சிகித்ஸையில் ப்ரவ்ருத்திப்ப துசிதமாகும்.

இப்போது நம் ராஜ்யம் அந்யாக்ராந்தமாயிருப்பது காரணமாக நேர்ந்திருக்கும் பஹுவித அஸௌகர்யங்களால் ஸத்ஸம்ப்ரதாய ப்ரவசநாதிகளுக்குண்டாயிருக்கு முபரோதங்களைப் பற்றி ப்ரஸ்தாவிக்க இதுஸந்தர்ப்ப மல்ல. அப்படிப்பட்ட ஸாமாந்யஹேதுக்க ளன்றியில், நம் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு வந்துள்ள அச்ரத்தை ஆலஸ்யம் வைமுக்யம் முதலிய இடையூறுகளின் ப்ரகாரங்களையும் அவைகளைப் போக்கடிக்க வேண்டிய வுபாயங்களையும் 'ஸ்மாரயே த்வாம் ந சிக்ஷயே' (ஞாபகப்படுத்துகிறேன்; தேவரீரை சிக்ஷிக்கவில்லை) என்கிற க்ரமமாய் சற்றிங்கு குறிப்பிடுவதுமாத்திரம் இந்த ஸமயத்தில் ப்ராப்தம்.

ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸம்ப்ரதாயஸ்தரனைவரும் தமக்கு பாக்யவசத்தால் கிடைத்திருக்கும் இந்த ஸம்ப்ரதாயமாகிற அளவில்லாப்பொருளைத் தாம் கைக்

கொண்டு அதன் பலத்தைத் தாம் அநுபவிப்பதும் பிறருக்கு யதா சக்தி விநியோகிப்பதுமே தமக்கு ஜந்மஸாபல்ய ஹேது வென்கிற நிச்சயத்துடன் நடக்க வேண்டிய தவசியமா யிருக்க இக்காலத்தில் அப்படிச் செய்யாமல் பித்ரு தநமான மஹாராஜ்யத்தைக் கைவிட்டுக் காட்டிற்புகுந்து வேடர்களுடன் வேட்டையாடி ஜீவிக்கும் ராஜகுமாரனைப்போல் நம்மில் பெரும்பான்மையோர் நம் ஸித்தாந்த க்ரந்தங்களைப் பரிசயம் பண்ணாது அந்யவித்யையி லிறங்கி வாழ்நாட்களை வீணாட்களாக்குவது இந்த துர்த்தசைக்கு முக்கியகாரணங்களிலொன்றாகும். வ்ருத்தியின் குறைவினால் தேஹதாரணோபாயத்திலேயே பெரும்பாலும் யத்தனிக்கவேண்டியிருப்பதால் ஸம்ப்ரதாய ஜ்ஞாநம் ஸம்பாதிக்க அவகாசமில்லை யென்று சொல்வது, சற்றுப் பராமர்சித்தால் வ்யாஜமாத்ரமென் றேர்ப்படுமே தவிர ஸரியான ஸமாதானமாகத் தோன்றாது. வ்ருத்தியின் காரணமான அஸௌகர்யம் ப்ராஹ்மணருக்கில்லாத காலம் எப்போதுமிருந்ததில்லை யென்பது எல்லோரு மறிந்த விஷயம். அதிலும் ஆகிஞ்சிந்யத்தையே (ஒன்று மில்லாமையே) தநமாகக் கொண்ட நமக்கு வ்ருத்திக் குறைவை வித்யையின் இடையூறுக்கு ஹேதுவாக்குவது உசிதமாகாது. உதரம்பரியா (வயிறேபெரியதா) யிருப்பவனுக்கு புத்திமாந்த்யம் ஸ்வதஸ்ஸித்தமயிருப்பது போல் தநமத முள்ளவனுக்கு வித்யையில் ப்ரவ்ருத்தியுண்டாவது ஸுகரமல்லவென்பது அநுபவ ஸித்தம். ஸத்வித்யை எல்லாவற்றையும் விடமேலான தென்பதைப் பூர்ணமா யுணர்ந்தவர்களுக்கு இதரமான எந்த அஸௌகர்யங்களிருந்தபோதிலும் அவை வித்யாப்யாஸத்துக்குத் தடங்கலாக மாட்டா. ஒருவனுக்கு மநஃபூர்வமான நோக்கு எதில் உத்கடமாயிருக்கிறதோ அந்த அவன் எப்பாடு பட்டாவது ஸாதிக்க முயலுகிறான் என்பதையும் அந்த விஷயத்தில் எவ்வளவு ப்ரபலமான தடங்கல்களையும் பாராட்டுகிறதில்லை யென்பதையும் லோகத்தில் ஸாதாரணமாய்க் காண்கிறோம். ஆகையால் அம்ருதம் போல் ஜராமரணங்களை நிவர்த்திக்கும் ஔஷதமாயும் ஆஸ்வாத்யதமமாயும், ஸர்வ ப்ரகாரமாகவும் தாரகமாயும் போஷகமாயுமுள்ள, நம் ஸம்ப்ரதாய வித்யையில் நமக்கு ப்ரவ்ருத்திக் குறைவு ஏற்பட்டிருப்பதற்கு முதன்மையான காரணம் அதன் ஸ்வரூபத்தை நாம் உள்ளபடி அறியாமையால் அதில் முற்றப்படி நோக்கம் வைக்காததே தவிர ஆகிஞ்சிந்யம் முதலிய வெளி ஹேதுக்களைச் சாக்கிடுவது யுக்த மாகாதென்பதை நாம் முதலில் அறியவேண்டும். உலகத்தில் ஒவ்வொருவரும் தமக்கு சாச்வதமான நன்மையைத் தேடிக்கொள்ள வேண்டுமென்கிற வபிஸந்தியுடனே தான் கார்யங்களைச் செய்து வருகிறார்கள். ஆனால் எது சாச்வதமான நன்மை என்பதை நன்கறியாமல் ப்ரமிப்பது காரணமாக ப்ரயத்நங்கள் வேறு படுகின்றன வேயொழிய தனக்கு அச்ரேயஸ்ஸையே

ஸம்பாதித்துக் கொள்ளவேண்டுமென்கிற பிடிவாதம் எவருக்கு மிருப்பது அஸம்பாவிதம்.

எதனால் தனக்கு க்லேசங்கள் விலகி ஏகாந்த நிர்வ்ருதி கிடைக்குமோ அது தான் பரமோபாயமென்பது நிர்விவாதம். ஆனதுபற்றி ஒரு மண்டபத்தின் அடிப்படையும் அதில் வைக்கப்பட்ட சுவர், தூண், வாரை முதலியவைகளும் எவ்விதமாக அமைக்கப்பட்டிருந்தபோதிலும் அதின் சிகரத்தை ஸர்வோந்நதமான ஸ்தாநத்தில் நிலையாகவிருக்கும்படி செய்வதற்கே ஸாதகமாயிருப்பது போல் நம்முடைய ஸர்வப்ரயத்நங்களும் நம்முடைய பரம ச்ரேயஸ்ஸாதநமான அத்யாத்ம ஜ்ஞாநத்துக்கு ஸாக்ஷாத்தாகவாவது பரம்பரையாகவாவது உபகாரகமாம்படி பரிஷ்கரிக்கவேண்டியதவசியம். அப்படி பரிஷ்கரிக்கப்பட்டால் மேலே தாங்கப்படும் சிகரம், தன்னைத் தாங்கும் தூண், சுவர் முதலிய கீழ்ப்பாகங்களை வெயில் மழை முதலிய உபரோதங்களினின்றும் சில காலம் ரக்ஷிப்பதுபோல ஸம்பந்நமான அத்யாத்ம ஜ்ஞாநத்தினால் அதற்குபகாரமாயிருந்துள்ள தேஹேந்த்ரியாதி ஸர்வோபகரணங்களும் ஸுபுஷ்டங்களாய் மேன்மேலும் பலத்தையும் பாடவத்தையும் அடைந்து சரிதார்த்தங்களாகின்றன. ஒருவன் தினம் முழுவதும் வேலைசெய்வது நிரந்தரத்தில் தான் திருப்திகரமாக போஜநஞ்செய்து பசியற்று நித்திரை செய்வதற்காகவே யென்பதும், வெயிற்காலத்தில் பண்டம் சேகரிப்பது மழைகாலத்தில் உபயோகத்துக்காகவென்பதும், இளமையில் த்ரவ்யம் தேடிவைப்பது மூப்பில் உதவுவதற்காகவென்பதும், அப்படிச் செய்யாமல் முன் ஜாக்கிரதையற்று அப்போதைக்கப்போது கையிலகப்பட்டதைத் தாறுமாறாக வீணாக்குபவர்கள் அவசியமான காலங்களில் உதவிபற்றுத் தடுமாறிப் பரிதபிக்கும் நிலைமையை யடைவதும், எல்லோருக்கும் அநுபவஸித்தம். இவ்விதமே நாம் கற்கவேண்டிய பருவத்தில் ஸரியான வித்யைக் கற்காமலும் அல்லது அதை கற்பதற்குத் தகுந்த முன் ஸம்ஸ்காரங்களைத் தேடிக்கொள்ளாமலு காலத்தை வீணாக்கி விட்டால் '[illegible]' என்கிறபடி 'லௌகிககார்யங்களை ஒவ்வொன்றாய்ப் பார்த்துப் பார்த்து வெறுப்புற்று மனது துயரடைந்து கொள்கொம்பில்லாக் கொடிபோலத் தடுமாறும் ஸமயத்தில் அதை நிலைபெறச்செய்து மேன்மேலும் உத்ஸாஹப்படுத்துவதற் கேற்ற ஜ்ஞாநவலம்பமில்லாமல் வாடி வருந்துவதை நேராகக் காண்கிறோம். ஆனதுபற்றி நாம் '[illegible]' என்கிறபடி சரீரமும் இந்திரியங்களும் மனஸும் சக்தியுள்ளவைகளாயிருக்கும்போதே ஸத்வித்யையைப் பரிசயம் செய்யவேண்டிய தவசியமென்று த்வரையுள்ளவர்களா யிருக்கவேண்டும்.

அத்யாத்ம வித்யையில் நேராக அதிகரிப்பதற்குப் பூர்வாங்கமாக ந்யாய மீமாம்ஸை முதலிய ஸாமாந்ய சாஸ்த்ரங்களில் பரிசயம் அவசியம் வேண்டும். அதற்கும் பூர்வாங்கமாக ஸம்ஸ்க்ருத பாஷையில் பயற்சி அத்யந்தமவசியமானது. சப்தத்திலிருந்தே ஜ்ஞாந முதிக்கவேண்டியிருப்பதால்சப்த வ்யுத்பத்தி தான் வித்யையயின் ப்ரதம பீடிகை யென்பதற்கு ஸந்தேஹமில்லை. ஆகையால் முதலில் ஸம்ஸ்க்ருத பாஷாப்யாஸம், பிறகு ஸாமாந்ய சாஸ்த்ரபரிசயம், பிறகு அத்யாத்ம சாஸ்த்ர அத்யயநம் என்கிற நம்பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கும் வரிசையை அநுஸரித்தால் ஸம்சயம் விபரீதஜ்ஞாநம் முதலியவைகளில்லாமல் நிச்சய ஜ்ஞாநம் ஸித்திக்கும். அந்த க்ரமத்தைவிட்டு ஏதோகொஞ்சம் பாஷாவ்யுத்பத்தியை எப்படியிலாவது ஸம்பாதித்து அத்யாத்ம சாஸ்த்ரத்தில் ப்ரவேசிப்பவர்களுடைய ஜ்ஞாநம் அஸ்திவாரமில்லாத கட்டடம்போல் நிலை நிற்காமல் சிதறிப்போகிறது. இதற்காக ஆங்காங்குபாடசாலைகளை ஸ்தாபித்து அதில் நம் பாலர்களுக்கு மேற்கூறிய வரிசைப்படிவித்யாக்ரஹண உதவியையும் ஒழுங்காய் செய்விக்கவேண்டியது நம்முடைய கடமையாகிறது. முதற்படியாகிய பாஷாப்யாஸ ஸந்தர்ப்பத்திலேயே நம் ஸம்ப்ரதாயத்துக்கு அஸாதாரணமான தத்வார்த்தங்களை வித்யார்த்திகள் எளிதில் தெரிந்து கொள்ளும்படி அவ்வர்த்தங்களை லலிதமாயும் மதுரமாயும் உதாஹரிக்கும்படியான உபாக்யாநம் முதலிய ப்ரகரணங்களை இதிஹாஸங்கள் புராணங்கள் இவைகளிலிருந்து கற்பிக்கவேண்டும். தவிரவும் மநுஸ்ம்ருதி முதலிய க்ரந்தங்களிலிருந்து தர்மாநுஷ்டாந க்ரமமும் வர்ணாச்ரம வ்யவஸ்தை முதலான அம்சங்களும் போதிப்பிக்கப்படவேண்டும். இப்படிக் கதைரூபமாகவும் விதிநிஷேத (கட்டளை, தடுத்தல் என்னும்) ரூபமாகவும் சிறுவர்களின் புத்தியில் தத்வார்த்தங்கள் உள்ளபடி படிந்து அவர்களுக் கநுபவ ஸித்தமாகும்படி ச்ரத்தையுடைய வாசார்யன் எளிதில் செய்யக்கூடும். இதற்கப்புறம் ஸாமாந்ய சாஸ்த்ர க்ரஹணகாலத்திலும் ஆசார்யன் தன் பரமோத்தேச்யமான மூன்றாவது பர்வாவை (படியை) ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அதற்கநுகுணமாக ஒவ்வொரு ப்ரகரணத்திலும் அநுகூல ப்ரதிகூலாம்சங்களைத் தெளிவித்துக் கொண்டே போனால், ஸாமாந்ய சாஸ்த்ரமும், ஸுலபமாய் அப்யஸிக்கப்படுவதுடன் மேல்வரும் அத்யாத்ம பர்வாவுக்கும் மிகவுமுபகாரகமாகும்.

இவ்விதமான பூர்வ பீடிகையுடன் அத்யாத்ம வித்யையை க்ரஹிக்க எத்தனிப்பவர்களுக்கு காய்ந்த விறகினிடம் அக்னிபோலவும் அயஸ்காந்தத்தினிடம் ஊசிபோலவும் அவ்வித்யை ஸ்வரஸமாக புத்திக்கு விஷயமாவதுடன் [illegible] ஹ்ருத்யமான இதிஹாஸ புராணாதிகளிலுள்ள வம்சங்களோடு [illegible]

வாசிப்படும்போது அநிர்வசநீயமான ஆநந்தத்தையும் ஸந்தோஷத்தையும் உண்டாக்கி நன்றாக த்ருடீகரிக்கப்பட்டு ஸ்திரமாய் தானாகவே அந்த ஸ்வ பாவஸித்தமாய்விடும். இந்த ப்ரகாரம் யதாக்ரமமாய் வித்யாப்யாஸம் பண்ணுவது எல்லாருக்கும் ஸாத்யமில்லை யென்றும் வ்யாஸங்காந்தர மில்லாமல் ஏகாக்ரமாய் ப்ரவ்ருத்திக்கும் ஏதோ சிலருக்குமாத்ரம் தான் ஸாத்தியப்படுமென்றும், ஆனதுபற்றி இந்த வழி எல்லாருக்கும் ஸாமாந்யமாய் உபகரிக்கக்கூடிய மார்க்கமாகாதபடியால் இதை விவரித்துக் குறிப்பிடுவது பயனற்றதென்றும் நினைப்பது ஸரியல்ல. நாற்றங்காலைச் சரியாகப்படுத்தி அதிக ஜாக்கிரதையுடனும் முயர்ச்சியுடனும் விதைத்து நாற்றுக்களைச் சரியாய் விருத்திசெய்வது கிருஷிகருக்கு முதன்மையானவேலை. பயிரின் விளைவும் வெகுவாக நாற்றின் ஸ்திதியைப் பொறுத்திருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இம்மாதிரியே சிற்சிலராவது யதாக்ரமமாய் வித்யையில பூர்ணாதிகாரிகளாகத் தேறினல்தான் விரைமுதல் பூமியில் விருத்தியடைவது போல் இவர்களால் மற்றவர்களுக்கு ஜ்ஞானம் பரவும். அப்படிச் சில வதிகாரிகள் இல்லாமற்போகும் பக்ஷத்தில் ஜ்ஞானம் கூடிய சீக்கிரத்தில் விரை முதலற்று லோபித்து விடுமென்பதற்கு ஸந்தேகமில்லை. ஆகையால் நம் ஸித்தாந்தமும் ஸம்ப்ரதாயமும் நிலைபெற்று வேரூன்றித் தழைத்துக் கிளைப்பதற்குமுக்கியாதாரம் முன்கூறிய மூன்றுபர்வாக்களின்படி யதாக்ரமமாய் வித்யாக்ரஹணம் பண்ணும் அதிகாரிகளின் ஸம்ருத்தியை மேன்மேலும் விருத்திசெய்ய உபாயம் தேடுவது கடன். இப்படிச் செய்வதில் முதல் இரண்டு பர்வாக்கள் ஸம்பந்தப்பட்ட வரையில் மாத்திரம் தான் பாடசாலைகளில் ஸாதாரணமாய் வித்யார்த்திகளுக்கு வித்யாக்ரஹணம் செய்விக்க முடியும். மூன்றாவது பர்வாவாகிய அத்யாத்ம சாஸ்த்ராப்யாஸம் உபதேச கோடியில் சேர்ந்திருப்பதால் அதற்கு அவரவர்கள் குல ஸம்ப்ரதாயத்துக் கனுகுணமாக வாசார்ய வரணம் செய்து அவ்வாசார்யனிடம் காலக்ஷேப ரூபமாக க்ரந்தாப்யாஸம் செய்வது வழக்கமாகையால் அதற்கு விரோதமில்லாத ஏற்பாடு செய்ய வேண்டிய தவசியமாகும். இப்போது சாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்து விசேஷமான ஸதாசார்யபரம்பரை வழியாக வித்யாக்ரஹணம் செய்து ஸம்ப்ரதிபந்நமான மான ஜ்ஞானஸம்பத்துப் பொருந்திய வாசாரியர்கள் ரொம்ப விரளமாயிருப்பதால் அப்படி இருப்பவர்களிடம் சென்று அவர்கள் ஜ்ஞானதீபம் அவர்களாயுஸ்ஸுடன் சாந்தமாய்விடாதபடி அதைத் தங்கள் புத்தியில் ஸங்க்ரமிக்கச் செய்து அதின் ப்ரகாசத்தைக் காப்பாற்றத்தக்க வதிகாரிகளைத் தேடியெடுத்து அந்தந்த வாசார்யர் ஸகாசத்தி லனுப்பி அத்யாத்ம சாஸ்த்ரத்தை ஸம்பூர்ண

மாய் க்ரஹிக்கும்படி ஏற்பாடு செய்வது உடனே அவச்யகர்த்தவ்யமான விஷயம். அதற்காக அவ்வாசார்யர்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் அவச்யமான வளவு த்ரவ்யஸஹாயம் செய்யவேண்டியதை தனவான்களனைவரும் தமது கடமையாக நினைக்கவேண்டும். அப்படிச் செய்யும் த்ரவ்ய ஸஹாயம் எத்தனையாயிருந்த போதிலும் அதை பஹுமானமாக நினைத்து ச்ரத்தையுடனும் பொறுப்புடனும் வித்யாப்ரவசனம் பண்ணும் ஆசார்யர்களும் வித்யாக்ரஹணம் பண்ணும் சிஷ்யர்களும் ஸ்வயம் ப்ரயோஜனமாகத் தங்களுக்கு ஸ்வரூப ப்ராப்தமான அத்யாபந அத்யயநங்களை ஸம்பூர்ணமாக நிறைவேற்ற வேண்டியதே யவசியமாகும். அவரவருக்கு இவ்விதமான அபிஸந்தி யிருந்தால் தான் அவரவர் யத்நம் ஸபலமாகும். வித்யாவான்கள் வித்யாப்ரவசநமே தங்களுக்கு ஸ்வதர்மமென்றும் வித்யார்த்திகள் வித்யாக்ரஹணமே தங்களுக்கு ஸ்வார்த்தஸாதக மென்றும் தனவான்கள் இவ்விரு வதிகாரிகளுக்குமுபகரிப்பதே தங்களுக்கு சரிதார்த்த மென்றும் உறுதிகொண்டு அனுஷ்டித்தல் வேண்டும். அப்படி நியமேநாநுஷ்டிக்கப்பட்டு வந்தபடியால் தான் முற்காலத்தில் நம்வித்யைகள் ஓங்கிவளர்ந்தது. அவ்வித வபிஸந்தியே இப்போது ஸரிவர இல்லாமையால் தான் நம் வித்யை இம்மாதிரி சோசநீய தைந்யத்தை யடைந்திருக்கிறது. ஆகையால் முன்போலவே மேற்கூறியபடி அவ்வவ்வதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்யத் துவக்கினல் பழையபடி வித்யாபிவ்ருத்திக்கு யாதொரு தடையுமிராது.

மேலும் இப்போது தேசத்தின் நிலைமையையும் இதர ஸந்நிவேசங்களையும் பராமர்சித்தால் அத்யயந ஸம்ப்ரதாயத்துக்கு ஸாக்ஷாத் ராஜாச்ரயத்தால் ஸௌகர்யக் குறைவு ஏற்பட்டு வருவது நமக்கு ப்ரத்யக்ஷமாயிருக்கிறது. அதற்கு ஏற்படும் பணச்செலவோ வரவர அதிகப்பட்டுவருகிறது. இந்த ஸ்திதியில் வ்ரதமும் கேட்டு ஸௌகரமுமில்லை யென்கிறபடி நமக்கிருக்கும் ஸ்வல்பாம்சத்தையும் வ்ரயம் செய்து அத்யயந ஸம்ப்ரதாயத்துக்கும் மார்க்கமில்லாமல் நமக்கு ஸ்வரூப ஹானியைத் தேடிக்கொண்டு நம்முடைய ஜந்மஸாபல்ய ஹேதுவான வித்யையை உபேக்ஷிப்பது யுக்தமாவென்பதை புத்திமான்கள் கவலையுடன் யோசிக்க வேண்டியது. இப்போது அநேகச் சிறுவர்களும் அவர்களின் அபிவ்ருத்தியில் அக்கரையுள்ள பெரியவர்களும் இவ்விஷயத்தை நன்றாய் அறிந்திருந்தும் 'கதாநுகதிகோ லோக:' என்கிறபடி முன் சென்னவர் போனவழியையே தொடர்ந்து செல்வது தங்கள் கடமையென்று நினைத்து வீணாக நிஷ்பலகரமான பாஷாந்தர வித்யாப்யாஸத்தில் பரிச்ரமப்படுகிறார்கள். இவ்வித வ்யர்த்தோத்யமத்தைக் கூடிய வரையில் ஒழிக்கவேண்டியது புத்திமான்களின் கடமையாகும்.

தவிரவும் நமக்கு ஸ்வரூபஸித்தமான ஸத்வித்யா பரிசயத்தால் தேஹதாரணோபாயமான வ்ருத்திக் குபரோதமுண்டாகுமென்று ப்ரமித்தல் ஸரியல்ல. அவரவர்களுக்கு ஸரியான அஸந்தியும் அக்கரையுமிருந்தால் எந்த வ்ருத்திக்கும் ஹாநியில்லாமல் ஸத்வித்யாப்யாஸம் செய்யலா மென்பதற்கு ஸந்தேஹமே யில்லை. ஆலஸ்யத்தாலும் அநாஸ்தையினாலும் அவகாசமில்லை யென்றும் சக்தியில்லையென்றும் சாக்குப் போக்குச் சொல்லலாமே தவிர உண்மையில் வ்ருத்யுபாய மெதுவாயிருந்தபோதிலும் அதற்கு ஜ்ஞாநஸம்பாதனத்தால் யாதொரு அந்தராயமு மிருக்கப்படாது. மேலும் வ்ருத்தியைப்பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியமில்லாத இளமைப் பருவத்தில் வித்யாப்யாஸம் ஸாதாரணமாய்ச் செய்யவேண்டியிருப்பதை நாம் யோசிக்குமளவில் வ்ருத்திக்கும் வித்யைக்கும் எவ்வித விரோதமும் இருக்க இடமில்லை யென்பது ஸ்பஷ்டமாகிறது.

தவிரவும் ஸத் வித்யாபிவ்ருத்தியைச் செய்விக்க வேண்டிய தவசியமென்பதை நம் ஜநங்கள் உணர்ந்த மாத்திரத்தில் அவ்வித்யை ப்ரவசனம் பண்ணக்கூடிய அதிகாரிகளைத் தேடவும் அவர்களுக்குக் குறைவின்றியில் அர்த்த ஸஹாயம் செய்து அவர்களைக்கொண்டு வித்யாப்ரவசநம் செய்விக்கவும் அதிகமாக ப்ரயத்நம் செய்வார்கள். இவ்வபிஸந்தி பரவப் பரவ வித்யாவான்களுக்கு யுக்தமான வ்ருத்திகள் ச்ரத்தா பூர்வகமாகக் கல்பிக்கப்படு மென்பதற்கு ஆக்ஷேபமில்லை.

நமது ஸித்தாந்த ப்ரவசனம் பண்ணுவதில் மூன்று ப்ரகாரங்கள் கவனிக்கத்தக்கவை. அவைகள் உபந்யாசம், வாக்யார்த்தம், உபதேசம் என்பனவாகும். இவற்றுள் முற்கூறியது அதாவது உபந்யாஸ ரூபமான ப்ரவசநம் ஜநஸமுதாயத்துக்கு இக்தர்சநம் பண்ணி நம் ஸம்ப்ரதாயத்தின் அதிசயத்தைத் தெரிவித்து அதால் உதாஸீனர்களுக்கு அதில் ஆஸ்தையை உண்டாக்கவும், கற்காமலே ஆஸ்தையுள்ளவர்களுக்கு அவ்வாஸ்தையை மேன்மேலும் வ்ருத்தி செய்யவும் ஸாதகமாகும். ஆனால் இதோடு மட்டும் சாரிதார்த்யம் பிறவாது. பூமியைப் பயிர் செய்ய ஆரம்பிக்கும்போது அதை உழவுக்குப்பதமாக்குவதற்காக நனைப்பது போல் உபந்யாஸ ச்ரவணத்தால் ஜிஜ்ஞாஸுவுக்குக் கேட்ட விஷயத்தைப் பற்றிய ஆபாத ப்ரதீதியும் அது சார்பாக அவ்விஷயத்தை மேல் விசாரிக்க வேண்டுமென்கிற ஆஸ்தையும் ஜனிக்கிறது.

(தொடரும்)

ஸ்ரீ:.

மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்.

(ஸ்ரீ - உ. வே. வாஜபேயம் - வீரராகவ தாதாசார்யர்)

ஒருவன் புத்திபூர்வமாகவோ, அல்லது பிறருடைய துர்ப்போதனையினாலேயோ, வேறுவிதமாகவோ, தனது வர்ணாச்ரமதர்மங்களைக் கைவிட்டு வேறு மதத்தில் ப்ரவேசித்துச் சிறிதுகாலம் சென்றவுடன் மனப்பூர்வமாகத் துக்கித்து அநுதாபமடைந்து விடுவானாகில் அவனுக்கு தர்மஜ்ஞர்கள் சாஸ்த்ரவிஹிதங்களான சுத்திகளையும் ப்ராயச்சித்தங்களையும் செய்து வைத்து மறுபடியும் அவனை ஸ்வதர்மங்களை அநுஷ்டித்துவரும்படி செய்வதில் சாஸ்த்ரங்கள் அநுகூலங்களாகவே இருக்கின்றன.

பாபங்களுக்குள் பெரியவைகளும், மஹாபாதகங்கள் என்று சொல்லப்படுகிறவைகளுமான ப்ரும்மஹத்யா ஸுராபானாதிகளுக்குங் கூட, சாஸ்த்ரங்களில் ப்ராயச்சித்த ஸம்வ்யவஹாராதிகள் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளில் சேராததும் அவைகளைவிடச்சிறியதுமான இந்த பாபத்துக்கு ப்ராயச்சித்தமுண்டென்கிற விஷயத்தில் ப்ரமாணங்களைத் தேடவேண்டியதில்லை.

மதாந்தரத்தில் ப்ரவேசித்தவனுக்கு தோஷத்தை உண்டுபண்ணக் கூடிய ஹேதுவானது இரண்டு வகையாக இருக்கிறது. முதலில் அவனுக்குண்டாகிய நாஸ்திக்ய புத்தியானது அவனை ப்ராயச்சித்தத்துக்கு உள்ளாக்குகிறது. இரண்டாவது அந்த புத்தியைக்கொண்டு அவன் தனது நித்ய நைமித்திக தர்மங்களை விட்டுவிடுவதும் ப்ராயச்சித்தத்துக்கு நிமித்தமாகிறது. ஆகவே மதப்ரஷ்டனுக்கு அநுதாபம் உண்டாகிவிட்டால், அவனுக்கு நாஸ்திக்ய புத்தி உண்டானதர்க்காகவும் வர்ணாச்ரம தர்மங்களை விட்டதர்க்காகவுமுள்ள ப்ராயச்சித்தங்களைசெய்யவேண்டும். ஆகவே இந்தப் பாபத்தை மஹாபாதகத்தில் சேர்க்க முடியாதாகையால், அதிபாதக, ஸமபாதக, உபபாதகாதிகளில் ஏதாவது ஒன்றில்தான் இதைச் சேர்க்கவேண்டியிருக்கிறது.

புத்தி பூர்வகமான பாபம்.

ஒருவன் புத்திபூர்வமாகவே மேற்சொல்லிய பாபத்தைச் செய்வானாகில் அவனுக்கு ப்ராயச்சித்தம் உண்டாவென்பதைப்பற்றிச் சிலருக்கு சங்கையுண்டாவது ஸஹஜம். ஏனெனில்,

ப்ராயஶ்சித்தைரபைத்யேநோ யதஜ்ஞாநக்ருதம் பவேத்।
காமதோ வ்யவஹார்யஸ்து வசநாதிஹ ஜாயதே ॥ (யாஜ்ஞவல்க்ய:)

(அஞ்ஜானத்தால் செய்யப்பட்ட பாபம் ப்ராயச்சித்தத்தினால் போய் விடுகிறது. காமசாரமாகச் செய்தால் ப்ராயச்சித்தத்தால் இஹத்தில் வ்யவஹார யோக்யதை மாத்ரம் உண்டாகிறது.)

நாபிஸந்திக்ருதே ப்ராயஶ்சித்த:-(வஸிஷ்ட:.) (வேணுமென்று செய்தால் ப்ராயச்சித்தம் கிடையாது.)—

இத்யாதி வசநங்களால் புத்திபூர்வமான பாபத்திற்கு ப்ராயச்சித்தம் கிடையாதென்றும். செய்து கொண்டாலும் இந்தலோகத்தில் வ்யவஹாரம் மாத்திரம் உண்டென்றும் தெரிகிறது. இதுவிஷயம்,

அகாம க்ருதாநாம் பாபாநாம் ப்ராயஶ்சித்தைர் நாஶ இஹ வ்யவஹார்யத்வம் ஸித்யதி। காமக்ருதாநாம் து இஹ வ்யவஹார்யத்வ மாத்ரம் ஸித்யதி।

(வேணும் என்று செய்யப்படாத பாபங்களுக்கு விதிக்கப்பட்ட ப்ராயச்சித்தங்களினால் நாசமும்; இந்தலோகத்தில் வ்யவஹார யோக்யதையும் உண்டாகிறது. காமசாரமாகச் செய்யப்பட்டவைகளுக்கோ வென்றால் ப்ராயச்சித்தத்தால் வ்யவஹாரயோக்கியதை மாத்ரம் ஸித்திக்கிறது) என்று தீக்ஷிதீயக் ரந்தத்தால் விளங்குகிறது.

புத்திபூர்வமானாலும் ப்ராயச்சித்தம் உண்டு. கீழ் உதாஹரிக்கப்பட்டிருக்கும் வசநங்களேயும் பல நிபந்தநக்காரர்களுடைய அபிப்ராயங்களேயும் பார்த்தால் இதை நன்ருய் அறியக்கூடும்.

மநு ஸ்ம்ருதியில்,

அகாமத: க்ருதே பாபே ப்ராயஶ்சித்தம் விதுர்புதா:।
காமகாரக்ருதே ப்யாஹுரேகே ஶ்ருதிநிதர்ஶநாத் ॥

(காமத்தால் செய்யப்படாத பாபத்துக்கும் பெரியோர்கள் ப்ராயச்சித்தம் உண்டென்ருர்கள். காமசாரமாகச் செய்யப்பட்டதற்கும் ச்ருதியை உதாஹரித்துச் சிலர் உண்டென்ருர்கள்) என்கிற வசநத்திலும், தேவல ஸ்ம்ருதியில்

அபரே நிஷ்க்ருதிம் ப்ராஹுரபிஸந்திக்ருதேஷ்வபி ।

(வேறுசிலர் புத்திபூர்வமாகச் செய்தவைகளுக்கும் பரிஹாரம் சொல்வார்கள்) என்கிற வசநத்திலும், புத்திபூர்வமான பாபத்துக்கு ப்ராயச்சித்தம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தேவல ஸ்ம்ருதியானது ம்லேச்ச மதத்தில் சேர்ந்தவர்களுக்கு ப்ராயச்சித்தம் விதிப்பதர்க்காகவே ஏற்பட்ட தென்பதை இங்கு மறந்து போகக்கூடாது.

இன்னும் பல ஸ்ம்ருதிகளில், 'த்விகுணம் புத்திபூர்வகே,' என்று புத்திபூர்வமான பாபங்களில் இரண்டுபங்கு ப்ராயச்சித்தம் செய்துகொண்டால் சுத்தி உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது, இவ்விஷயத்தில் விசேஷ சர்ச்சைசெய்து கடைசியாக தீக்ஷிதீயத்தில்,

'காமக்ருதாநாஞ்ச பதநீய வ்யதிரிக்தாநாம் த்விகுண ப்ராயஶ்சித்தை: நரகநிவ்ருத்திரிஹ வ்யவஹார்யத்வம் ஸித்யதி । வஸிஷ்டாதி ஸ்மரணம் பதநீய பாபவிஷயம்'

என்கிற பங்க்திகளால் ப்ருஹ்மஹத்யாதி மஹாபாபங்கள் தவிர மற்றபாபங்கள் விஷயத்தில் புத்திபூர்வகங்களாயிருந்தாலும், நரகநிவ்ருத்தி வ்யவஹாரார்ஹதைகள் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது - புத்திபூர்வகமாகச் செய்யப்பட்ட மஹாபாபங்களுக்கு ப்ராயச்சித்தம் கிடையாது என்று சொன்ன ஸ்ம்ருதிகள் ப்ராயச்சித்தம் செய்து கொள்வதை தடுப்பதர்க்காக அல்ல; ஆனல் அந்த ப்ராயச்சித்தத்தினலும் சுத்தி உண்டாகுமாயினும் பரலோகத்தில் நரகாதி அநுபவங்கள் நிவ்ருத்தி ஆகாது என்பது தான், என்று அபிப்ராயப் படுகின்றன. இவ்விஷயத்தைப் பராசரமாதவீயத்தில்

ப்ராயஶ்சித்தாபாவ வாதிநாம் வசநாநாம் நரக நிவாரணாபாவ: ஸமீக்ஷித: । ஸத்பாவவாதிநாம் து வ்யவஹார ஜநநஶக்திரபிப்ரேதா ।'

என்கிற வாக்யங்களால் விளக்கிக் கூறப்பட்டது. ஆகையால் புத்திபூர்வகமாக மதாந்தரத்தில் ப்ரவேசித்து ஸ்வதர்மங்களேக் கைவிட்டவனுக்கும் ப்ராயச்சித்தாதிகளால் சுத்திசெய்து வைக்கலாமென்று ஏற்படுகிறது.

மதப்ரஷ்டனுக்கு 'ஹேமாத்ரி' முதலிய வைகளில் சொல்லப்பட்ட நாஸ்திக்ய ப்ராயச்சித்தத்தையும் கர்மப்ரஷ்ட ப்ராயச்சித்தத்தையும் செய்துவைப்பதைப் பொதுவாக ஸ்ம்ருதிகளெல்லாம் அங்கீகரிக்கின்றன.

தேவல ஸ்ம்ருதி விஷயம்.

இனி மதப்ரஷ்டனுக்கென்றே ப்ரத்யேக ஸ்ம்ருதிகளில் சொல்லியிருப்பதைக் கவனிப்போம். ப்ராயச்சித்தங்களே விதிக்கும் ஸ்ம்ருதிகள் பல இருந்தாலும், ப்ரத்யேகமாக மதப்ரஷ்டனுக்கு விதிக்க வந்தது தேவலஸ்ம்ருதி. அதன் ஆரம்பத்தில், தேவலரைநோக்கி ரிஷிகள்

'ஸமவது ம்லேச்சைர்நீதா ஹி கதம் ஶுத்திமவாப்நுயு: । ப்ராஹ்மணா: க்ஷத்ரியா வைஶ்யா: ஶூத்ரா ம்லேச்சாநாம் பாபவஶ: ॥

'கதம் ஸ்நாநம் கதம் ஶௌசம் ப்ராயஶ்சித்தம் கதம் பவேத்। கிமாசார பவேயுஸ்தே தத்வக்தும் ஸவிஸ்தராத் ॥'

(ம்லேச்சர்களால் கொண்டு போகப்பட்ட ப்ராம்மண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ராதிகள் முறையே எப்படி சுத்தி அடைவார்கள்; ஸ்நாநம் எப்படி? சௌசமெப்படி? ப்ராயச்சித்தம் எப்படி? அவர்கள் அநுஷ்டிக்கவேண்டிய ஆசாரங்கள் எப்படி? இவற்றை விஸ்தாரமாகச் சொல்லும்,) என்று கேட்க தேவலர் தமது ஸ்ம்ருதி முழுவதிலும் இவ்விஷயத்தைப் பலவிதமாகச் சொல்லியிருக்கிறார்.

இங்கு 'ம்லேச்ச' என்கிற பதமானது பொதுவாக வர்ணாச்ரமதர்மாதிகளை ஒப்புக்கொள்ளாத ஸகல ஜாதிகளையும் குறிக்கிறது. அதே ஸ்ம்ருதி முதலில்,

'ம்லேச்சைர் நீதேந விப்ரேண ஸமா: ஸஹநாக்ருதம்। தஸ்ய சுத்திம் ப்ரவக்ஷ்யாமி யாவதேகம் து வத்ஸரம்॥ சாந்த்ராயணம் து விப்ரஸ்ய ஸபராகம் ப்ரகீர்த்திதம்॥

ஸம்ஸ்காராந்தே ச விப்ராணாம் தாநம் தேயம் து தக்ஷிணா। தாதவ்யம் சுத்தி ஹேதோர் ருத்விக்ப்யோ ஹஸ்திகாஞ்சநம்॥

ததாஸ்ய து குடும்பாநாம் பங்க்திம் ப்ராப்நோதி நாந்யதா। ஸ்நாநம் ச யதா ந்யாயம் சுத்தேநைவ விசுத்யதி॥

அஸம்வத்ஸர ரூபம் ம்லேச்சைர் நீதோதா ஸதீவகு।
ப்ராயச்சித்தம் து ஸம்வீக்ஷ்ய ப்ராஹ்மணாநேந சுத்யதி॥'

என்கிற வசனங்களால் பொதுவாக ம்லேச்சரால் கொண்டுபோகப்பட்ட ப்ராம்மணனுக்கு ஒரு வருஷம் வரையில் பராகத்துடன் கூடிய சாந்த்ராயணம் என்கிற ப்ராயச்சித்தத்தைச் செய்துவைத்து, 'ஸம்ஸ்கார பூர்வகம் தஸ்ய ஸர்வம் கார்யம் யதாவிதி', என்கிறபடியே, அவனுக்கு கர்ப்பாதாநாதி ஸகல ஸம்ஸ்காரங்களையும் மறுபடி செய்துவைத்து, ஒரு வருஷம் கடந்தபின் கங்கா ஸ்நாநம் செய்துவைத்தால் அவன் சுத்தனாகி விடுகிறதாகவும், அதன்பிறகு அவன் தனது பார்யை குடும்பங்கள் இவர்களோடு சேர்ந்துகொள்ள யோக்யதை உள்ளவனாகிறதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு மதாந்தரத்தில் நுழைந்தவன், அங்கு கோவதம், கோமாம்ஸாதி பக்ஷணங்கள், முதலிய கெட்டகார்யங்களைச் செய்துவிட்டால் அதற்கு ப்ராயச்சித்த முறையைச் சொல்லுகிறார்.

'பலாத் தாஸீக்ருதா யே ச ம்லேச்ச சண்டாள தஸ்யுபி:। அசுபம் காரிதா: கர்ம கவாதி ப்ராணிஹிம்ஸநம்॥ உச்சிஷ்ட மார்ஜநம் சைவ ததா தஸ்யைவ பக்ஷணம்। தத் ஸ்த்ரீணாம் ச ததா ஸங்கம் தாபிச்ச ஸஹ போஜநம்॥

மாஸோஷிதே த்விஜாதௌ து ப்ராஜாபத்யம் விசோதநம்।

சாந்த்ராயணம் த்வாஹிதாக்நே: பராகஸ்த்வதவா பர:। அப்தம் ஸம்வத்ஸரம் ப்ராயச்சித்தம் த்விஜோத்தமை:॥

'ஸம்வத்ஸரோஷிதச் சூத்ரோ மாஸார்த்தம் யாவகம் பிபேத்।
ஊர்த்வம் ஸம்வத்ஸராத் கல்ப்யம் ப்ராயச்சித்தம் த்விஜோத்தமை:॥
ஸம்வத்ஸரைச் சதுர்பிச்ச தத்பாவமதிகச்சதி।
ப்ராயச்சித்தம் ஸமாஹ்ருத்ய..................துர்காரதயேத:।
ஸம்வத்ஸரம் வா மாஸம் மாஸார்த்தம் ஏவ வா॥' (17-25-தே)

என்று. இந்த வசநங்களில் மதாந்தரத்தில்ப் போய் கோவதம், மாம்ஸ பக்ஷணம், ம்லேச்ச ஸ்த்ரீ ஸம்ஸர்க்கம், அவர்களுடன் ஸஹபோஜனம், முதலிய பாபங்களைச் செய்தவர்களுக்கு ஒருமாஸத்திர்க்குள்ளானால், ப்ராஜாபத்யமும், அதர்க்குமேல் ஒருவருஷமிருந்தால் பராகம் சாந்த்ராயணம் இவைகளையும் செய்துகொள்ள வேண்டுமென்றும், ஒருவருஷத்துக்கு மேற்பட்ட விஷயங்களில், ப்ராயச்சித்தத்தைக் கல்பித்துச் செய்துகொள்ள வேண்டுமென்றும், நான்கு வருஷத்திர்க்குள் ப்ராயச்சித்தம் செய்து கொள்ளாதவன் ம்லேச்சனாகவே ஆகிவிடுகிரதாகவும், அந்த துராத்மாவுக்கு ப்ராயச்சித்தத்தைக் குறைத்துச் செய்துவைக்கக்கூடாதென்றும் சொல்லப்பட்டிருப்பதால், மதப்ரஷ்டனாகப் போய் கோவதாதி பாவம் செய்தவனுக்குக் கூட ப்ராயச் சித்தத்தினால் சுத்திசெய்து வைக்கலாமென்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

அதன் பிறகும் ம்லேச்சர்களால் கொண்டு போகப்பட்ட ஸ்த்ரீகளுக்கு ப்ராயச்சித்தங்களைச் சொல்லிவிட்டு கடைசியில்..............

'க்ருஹீதோ யோ பலாந் ம்லேச்சை: பஞ்ச ஷட் ஸப்த வா ஸமா:। தசாதி விம்சதிம் யாவத் தஸ்ய சுத்திம் விநிர்திசேத்। ப்ராஜாபத்யத்வயம் தஸ்ய சுத்திரேஷா விதீயதே। அத: பரம் நாஸ்தி சுத்தி: க்ருச்ச்ரமேவ ஸஹோஷிதே। ம்லேச்சை: ஸஹோஷிதோ யஸ்து பஞ்சப்ரப்ருதி விம்சதி:। வர்ஷாணி சுத்திரேஷோக்தா தஸ்ய சாந்த்ராயண த்வயம்॥'

17. 28 தே. விஸ்.

என்கிற வசநங்களால் ம்லேச்சர்களால் கொண்டுபோகப்பட்டு அங்கேயே ஐந்து ஆறு ஏழு வருஷங்கள் அல்லது பத்துமுதல் இருபது வருஷங்கள் வஸித்தவனுக்கு இரண்டு ப்ராஜாபத்யங்களால் சுத்திசெய்து வைக்கலாமென்றும், அதர்க்கு மேல்பட்ட வருஷங்களுக்கு சுத்தி கிடையாது என்றும், ம்லேச்ச ஸஹவாஸாதிகளைச் செய்தவனுக்கு ஐந்துமுதல் இருபது வருஷங்கள் வரை ப்ராயச்சித்தம் செய்து வைக்கலாம் என்றும், சொல்லப்பட்டிருக்கிறது'

இரண்டொரு வருஷங்கள் ம்லேச்சனால் கொண்டு போகப்பட்டவனுக்குச் சாந்த்ராயணம் முதலிய கடினங்களான ப்ராயச்சித்தங்களைச் சொல்லி விட்டு, இங்கு, 6, 7, 10, 20 வருஷங்கள் ப்ரஷ்டனாயிருந்தவனுக்கு லகுவான இரண்டு ப்ராஜாபத்யம் விதித்திருப்பது ந்யாயமாவென்று ஸம்சயிக்க இடமில்லை. 'ஹ்ராயஸ்சித்தெ யாநி ஶ்ரூயந்தே யாநி ஸம்வத்ஸரெ' என்று ஆபஸ்தம்பாதிகள் செய்திருக்கிற வ்யவஸ்தையை அநுஸரித்து கீழ்ச்சொல்லிய சாந்த்ராயணாதிகளுடன் இந்த இரண்டு ப்ராஜாபத்யங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அர்த்தமே யல்லாது இதுமட்டும் போதும் என்று அர்த்தமில்லை. ஆகையால் 20-வருஷங்கள் வரையிலும் ப்ரஷ்டனாயிருந்தவனுக்கு. சாந்த்ராயணம், ப்ராகம், ப்ராஜாபத்யம், பஞ்சகவ்யம், ஜாதகர்மாதி ஸம்ஸ்கார வ்ருத்தி ஆகிய இவைகளால் சுத்திசெய்து வைக்கலாமென்று தேவலஸ்ம்ருதி வசநங்களால் ஸாதிக்கப்படுகிறது.

இவ்வாறு மதப்ரஷ்டர்கள் விஷயத்தில் தேவல ஸ்ம்ருதி ப்ரத்யேகமாக ப்ராயச்சித்தங்களை விதித்திருப்பதால் இந்த விஷயத்தில் விவாதத்துக்கு இடமில்லை. இதில் கீழ்க்காட்டிய வசனங்களில் 'ம்லேச்சைர்நீதெந'— 'ஸ்த்ரீ ஶூத்ரா: க்ருதா:'— 'ஶூத்ரெண வா ஸ்த்ரீ ம்லேச்சை:' இத்யாதிகளில் தற்காப்புச் செய்துகொள்ள முடியாமலிருக்கிற ஒருவனை ம்லேச்சாதிகள் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு போய்விட்டால் அவன் விஷயத்தில் மாத்திரமே மேற்கண்டபடி ப்ராயச்சித்தங்கள் அநுஷ்டிக்கத் தக்கவைகளேயல்லாது புத்திபூர்வகமாகவே ஒருவன் ம்லேச்ச ஜாதிகளில் ப்ரவேசிப்பானாகில் அவன் விஷயத்தில் இந்த விதிகளை உபயோகிக்கலாமா வென்பதில் சில ஆசங்கை உண்டாகலாம்.

முதலில் 'ம்லேச்சைர்நீதெந' (ம்லேச்சரால் கொண்டுபோகப்பட்டவனால்) என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறதே யல்லது, புத்தி பூர்வகமா, பலாத்காரமாவென்பது விசேஷிக்கப்படவில்லை. ஆகையால் அந்த வசனத்தில் ஸம்சயத்துக்கு இடமில்லை. மற்றவிடங்களில் 'ஸ்த்ரீ ஶூத்ரா' என்கிற பதத்தில் 'ஸ்த்ரீ' என்பதை விசேஷிக்கவில்லை யாகையால் பொதுவாக வாக்பலம், சரீரபலம் ஆகிய இரண்டையும் க்ரஹித்துக்கொள்ள ஆக்ஷேபம் சொல்ல முடியாது. வாக்பலத்தால் செய்யப்படுகின்ற காரியங்களையும் பலாத்கார காரியங்களாகவே சாஸ்திரங்களிலும் லோகத்திலும் வ்யவஹரிக்கப்படுவதைக் காண்கிறோம். தவிரவும் ஒருவன் தனது வாக்பலத்தால் அதாவது வ்யாமோஹகரங்களான வார்த்தைகளால் ஒருவனை மதாந்தரத்தில் ப்ரவேசிக்கும்படி செய்துவிட்டால், அவன் விஷயத்தில ஸ்ம்ருதிக்காரர்கள் தனியாக ப்ராயச்சித்தாதிகளைச் சொல்லாமல் விட்டுவிட்டதையும் கவனிக்கவேண்டும். வாக்பலத்தால் செய்யப்படுவதையும் பலாத்காரத்தில் சேர்த்துக்கொள்ளலாம்

என்கிற எண்ணத்தாலேயே ஸ்ம்ருதிக்காரர்கள் அதை விட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. பிறருடைய வாக்பலத்தால் மதாந்தரத்துக்குக் கொண்டு போகப்பட்டவன் தவறுதலாகவோ ந்யாயமாகவோ தனது புத்தியையும் அதில் ஸம்பந்தப்படுத்தி யிருப்பானாகையால் அவன் விஷயம் ஒருமாதிரியாக புத்தி பூர்வகத்தில் சேர்ந்ததே யாகும். முற்றிலும் புத்தி பூர்வகமாக மதாந்தரத்தில் ஒருவன் ப்ரவேசித்து விட்டாலும் அவனுக்கும் கீழ்சொல்லிய ப்ராயச்சித்தங்களையே இரண்டு பங்காகச் சேர்த்துச் செய்துவைக்க வேண்டும். இது 'த்விகுணம் புத்திபூர்வகெ' இத்யாதிகளால் சொல்லப்பட்டிருப்பது மேலே உபபாதித்திருக்கிறது. ஆகையால் எல்லாவித பலாத்காரத்திலும் புத்தி பூர்வகவிஷயத்திலும் பாபத்தினுடைய கௌரவலாகவத்வரூபத்துக்கு (பெரியது சிறியது என்கிறதற்கு) த்தகுந்தபடி கீழ்ச்சொல்லிய ப்ராயச்சித்தத்தையே வ்ருத்தி செய்தும் குறைத்தும் ப்ரயோகிப்பதை வசநங்களும் ந்யாயங்களும் ஒப்புக்கொள்ளுகின்றன. இப்படியே பராசர மாதவீயத்தில் சொல்லப்பட்டிருக்கிற விஷயமும் இங்கு கவனிக்கத்தக்கது.

'ஶ்ராத்தேன வ்யதிக்ஷேப: வேதநிந்தா ஸுஹ்ருத்வத: ।
ப்ரஹ்மஹத்யாஸமம் ஜ்ஞேயம் அதீதஸ்ய ச நாஶநம் ॥'

என்கிற யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி வசநத்திலிருக்கும் வேதநிந்தை என்கிற பாபத்துக்கு வ்யாக்யாநம் செய்யும்போது பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது:—

'வேதநிந்தா த்ரிவிதா । பௌத்தார்ஹதாதி ஶாஸ்த்ராப்யாஸ வேதாநாம் ப்ராமாண்ய ப்ரதிபாதநேந நிபுணம் வக்தா நிந்தா । ஸேயம் யாஜ்ஞவல்க்யேந ப்ரஹ்மஹத்யாஸமத்வேந உபவர்ணிதா ।

ஸத்யபி வேத ப்ராமாண்யே புத்யா ஜல்பித விதண்டாதி ஶோக ஶாஸ்த்ராப்யாஸநிரதயா ஶ்ருதி ஸ்ம்ருத்யர்த்த ஜாநாத் ஸ்வாஜ்ஞா த்விதீயா । ஸேயம் ஸுராபாநஸமேஷு உக்தேநோக்தா ।

யஸ்து வைதிக கர்ம கர்த்தும் சக்தோ நாத்யந்தம் ஶ்ரத்தயா கர்மநி ஶ்ரத்தாவாந் ஸந்நேவ கேவலம் கர்மாதி த்ருஷ்ட்வா ஹஸதி । ஸேயம் நிந்தா உபபாதகேஷு பட்யதே ।'

அதாவது, வேதநிந்தைஎன்கிற பாபமானது மூன்றுவகைப்படும்; அதில் பௌத்தம், ஆர்ஹதம், முதலியசாஸ்த்ரங்களை அப்யஸித்து வேதங்களை அப்ரமாணங்களென்று சொல்லிப் பிறரை நிர்ப்பந்திப்பது ஒருவகை; இது ப்ரும்மஹத்திக்கு ஸமமென்று யாஜ்ஞவல்க்யரால் சொல்லப்பட்டது. வேதத்தில் ப்ரா

மாண்யபுத்தியிருந்தும் கெட்ட சாஸ்திரபரிசயத்தால் விதண்டாவாதம்செய்து ச்ருதி ஸ்ம்ருதி தர்மங்களை அவமதி செய்வது இரண்டாவது. இதுஸுராபாநத்துக்கு ஸமாநமென்று மநுவால்சொல்லப்பட்டது. ஒருவன் வைதிககர்மங்களைச் செய்துகொண்டும் அதில் வாஸ்தவமாக ச்ரத்தைவைக்காமல் ஜநாபவாதத்துக்காக மட்டும் அதைச்செய்கிறதாகச் சொல்வது மூன்றாவது. இது, உபபாதகத்தில் சேர்ந்தது.

இந்த மூன்றுவகையான வேதநிந்தை பாபத்தில் முதலாவது பாபத்தையே நாம் கவனிக்கவேண்டும். ஆதில் பௌத்தாதி மதசாஸ்த்ரங்களை அப்யஸித்து நமதுவேதங்களையும் அதில் விதிக்கப்பட்ட தர்மங்களையும் நிந்திப்பதுடன், பிறரையும் அந்தமாதிரி செய்யும்படி நிர்ப்பந்திப்பது ஓர் வேதநிந்தையாகி அதற்கு ஸமபாதக தோஷமுண்டென்று சொல்லப்பட்டிருப்பதால் மதப்ரஷ்டவிஷயத்தை இதில்சேர்த்து அதற்கான நாஸ்திக்ய ப்ராயச்சித்தத்தால் சுத்திசெய்து வைக்கலாமென்று ஏற்படுகிறது..........இவ்விஷயத்தை நாஸ்திக: க்ருச்ச்ரம் த்வாதஶராத்ரம் சரித்வா..............விரமேந்நாஸ்திக்யாத் (நாஸ்திகன் 12 நாள் க்ருச்ச்ரமநுஷ்டித்து நாஸ்திக்வத்லிருந்து மீளுகிறான்) என்கிற வஸிஷ்டஸூத்ர மநுகூலமாயிருக்கும.

ஸம்வ்யவஹாரவிஷயம்.

சாஸ்த்ரங்களில் மஹா உத்கடங்களான பாபங்கள் எல்லாவற்றிற்கும் ப்ராயச்சித்தம் விடாமல் சொல்லப்பட்டிருப்பதற்கு அவைகளை பாபிகள் செய்துகொண்டு சுத்தியடைய வேணுமென்கிற அபிப்ராயமே யல்லது வேடிக்கைக்காகச் சொல்லப்படவில்லை. ஆகையால் எவ்வளவு பெரிய பாபத்துக்கும் ப்ராயச்சித்தம் செய்து கொள்வதினால் உண்டாகும் ப்ரயோஜநம் என்னவென்பதையும் சாஸ்த்ரங்களே விவரித்துச் சொல்லிவிட்டன. யாஜ்ஞவல்க்யர்,

'அகுர்வந் விஹிதம் கர்ம நிந்திதம் ச ஸமாசரந் | ப்ரஸக்தஶ்சேந்த்ரியார்தேஷு ப்ராயஶ்சித்தீயதே நர: | தஸ்மாத்தேநேஹ கர்தவ்யம் ப்ராயஶ்சித்தம் விஶுத்தயே | ஏவமஸ்யாந்தராத்மா ச லோகஶ்சைவ ப்ரஸீததி |'

என்பதால் பாபத்துக்காக ஒருவன் ப்ராயச்சித்தம் செய்துகொள்வது அவசியமென்றும், அதனால் அவனுடைய அந்தராத்மா சுத்தியடைந்து த்ருப்தி யடைவதுடன் லோகமெனப்படுகிற ஜநங்களும் இவனுடன் கலந்து த்ருப்தி யடைகிறார்கள் என்றும், சொன்னார்.

(தொடரும்.)

ப்ராச்யாம் ஸம்ஸ்ப்ருஶேத்ததா | நிஷீதேவ ஸம்ஸ்பர்ஶயேதி வஹ்நிமத்யே ததா || ப்ரதே விஷ்ணோ அஜஸ்ரேதி யாம்யே ததா | ஸோமஸ்ய ஆராசீதிதி ஸௌம்யே ததா || ஸம்ஸ்ப்ருஶேத்தத: பரஸ்தாத்தத்ஸு ஸுதர்ஶநஸ்தவா | ஸந்ஸ்நாப்ய ஶுத்தோதேந ஸுதர்ஶநோதிஹிதம் || " இதி | ஏவமேகஸ்யாமேவ ஸம்ஹிதாயா மநேகேஷ்வத்யாயேஷு ஸுதர்ஶநஸ்ய விநியோகோ த்ருஷ்ட: | ததா ஸம்ஹிதாஸ்வபி ஸம்ஹிதாஸு தேஷாம் விநியோகோ த்ருஶ்யதே | ததா ஹி விஷ்ணுதத்வே சர்யாபாதே ஷஷ்டபடலே 'திவ்யந்தரிக்ஷ பௌமாநாமுத்பாதாநாம் ப்ரஶாந்தயே | பௌருஷம் ஸூக்தமாவ்ருத்ய ப்ரத்யக்ருசம் ஶதம் ஶதம் | ஸஹஸ்ரஶீர்ஷேத்யாதி சதஸ்ருபிர் ஶதம் ததி | ஸுதர்ஶநேதி சதஸ்ருபிஸ் தண்டுலைர்ஜுஹுயாத் || ' இதி | காலோத்தரஸம்ஹிதாயாம் ஸுதர்ஶந ஸமாராதந

ஸ்வோஜோ விப்ர:' என்கிற மந்திரத்தினால் கிழக்குத் திக்கில் இருக்கும் கலசத்தைக்கொண்டும், 'நிஷீதேவ' என்கிற மந்திரத்தினால் தென்கிழக்கு மூலையில் இருக்கும் கலசத்தைக்கொண்டும், 'ப்ரதே விஷ்ணோ' என்கிற மந்திரத்தினால் தெற்கு திக்கில் இருக்கும் கலசத்தைக்கொண்டும், 'ஸோமஸ்ய ஆராம்' என்கிற மந்திரத்தினால் வடகிழக்கில் இருக்கும் கலசத்தைக்கொண்டும் இப்படி எட்டு மந்திரங்களினாலும், இன்னும் ஸுதர்ஶநத்தைப் பற்றிச் சொல்லுகிற மந்திரங்களினாலும் நடுவில் இருக்கும் கலசத்தைக் கொண்டும் ஸ்நாநம் செய்விக்கவேண்டும். அப்படியே சுத்த தீர்த்தத்தினால் ஸ்நாநம் செய்வித்து' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஒரே ஸம்ஹிதையில் அநேகம் அத்யாயங்களில் ஸுதர்ஶநத்தைச் சொல்லுகிறது என்று இந்த மந்திரங்களுக்கு விநியோகம் சொல்லியிருப்பது காணப்பட்டிருக்கிறது. அப்படியே அநேகம் ஸம்ஹிதைகளில் விநியோகம் காணப்படுகிறது. எப்படி என்னில்:—விஷ்ணுதத்வத்தில் சர்யாபாதத்தில் ஆறாவதுபடலத்தில் 'ஆகாசத்திலும் மேல் உலகங்களிலும் பூமியிலும் உண்டாகிய அபசகுனங்கள் சாந்தி அடைவதற்காக புருஷஸூக்தத்தினால் ஒவ்வொரு ரிக்குக்களினாலும் நூறு நூறு தடவை நெய்யினால் ஹோமம் செய்யவேண்டும். 'ஸஹஸ்ர ஶீர்ஷம்' என்றாரம்பிக்கும் நான்கு மந்திரங்களினால் நூறு தடவை தயிரைக்கொண்டு ஹோமம் செய்யவேண்டும், 'ஸுதர்ஶந ஸுதர்ஶந' என்றாரம்பிக்கும் நான்கு மந்திரங்களினால் அரிசிகளைக்கொண்டு ஹோமம் செய்யவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. காலோத்தர ஸம்ஹிதையில் ஸுதர்ஶநத்தின் ஆராதனத்தைச்சொல்லும் அத்யாயத்

[illegible]

தில் 'இப்படியே விமானத்தின் நுனியில் சக்ரத்தை ஸ்தாபநம் செய்யவேண்டும், பனிரண்டு அல்லது எட்டு அல்லது ஆறு ஆரைக்கால்களையுடைய சக்ரத்தை ப்ரதிஷ்டைசெய்து பனிரண்டு கும்பங்களால் ஸ்நாநம் செய்விக்கவேண்டும். '[illegible]' என்கிற மந்திரத்தினல் பாலைக்கொண்டு ஸ்நானம் செய்விக்கவேண்டும். '[illegible]' என்கிற மந்திரத்தினல் தயிரைக் கொண்டு ஸ்நாநம் செய்விக்கவேண்டும். பிறகு '[illegible]' என்கிற மந்திரத்தினல் நெய்யைக்கொண்டு அபிஷேகம் செய்விக்கவேண்டும். '[illegible]' என்கிற மந்திரத்தினல் தேனைக்கொண்டு ஸ்நாநம் செய்விக்கவேண்டும். '[illegible]' என்கிற மந்திரத்தினல் கரும்பின் சாற்றைக் கொண்டு அபிஷேகம் செய்விக்கவேண்டும். '[illegible]' என்கிற மந்திரத்தினல் பஞ்சகவ்யத்தைக்கொண்டு ஸ்நாநம் செய்விக்கவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீவிஷ்ணு மந்திரத்தில் 'ஆங்கிரஸ ஸூக்தத்தையும் ப்ரும்மஸூக்தத்தையும் விஷ்ணுஸூக்தத்தையும் புருஷஸூக்தத்தையும் இப்படியே மற்ற மங்களமான அர்த்தங்களைச்சொல்லுகிற ஸூக்தங்களையும் (சொல்லவேண்டும்)' என்று (சொல்லப்பட்டிருக்கிறது). அப்படியே 'பரமாத்மஸூக்தத்தையும் விஷ்ணுஸூக்தத்தையும் புருஷஸூக்தத்தையும் '[illegible]' என்கிற மந்திரங்களையும் அந்யர்களைச் சொல்லும்படி செய்விக்க வேண்டும்' என்று (சொல்லப்பட்டிருக்கிறது.) இவ்விடத்தில் ப்ரும்ம ஸூக்தம் பரமாத்ம ஸூக்தம் என்னும் பதங்களினல் மஹோபநிஷத்தில் சொல்லப்பட்ட பத்தொன்பது மந்திரங்களாகிய ப்ரும்மஸூக்தமே சொல்லப்படுகிறது, பதத்தின

[illegible]

லும் அவைகளின் அர்த்தங்களினலும் அவைகளே ஜ்ஞாபகப் படுத்தப்படுகிறபடியினல். ஆநந்த ஸம்ஹிதையில் ப்ரதிஷ்டையைச் சொல்லும் அத்யாயத்தில் 'என்னுடைய ஷடக்ஷரம் என்கிற மந்திரத்தினல் பசுவின் நெய்யினல் அபிஷேகம் செய்ய வேண்டும். புருஷஸூக்தம் அத்யாத்ம ஸூக்தம் மஹோபநிஷத் ஸ்ரீஸூக்தம் இவைகளை ஜபித்துக்கொண்டு மிகுதி ராத்திரியைப் போக்கவேண்டும்' என்று (சொல்லப்பட்டிருக்கிறது.) இவ்விடத்தில் ஸ்ரீஸூக்தத்தை ஜபம் செய்யும்படி விதித்திருப்பது மிகவும் மங்களகர மாதலாலும், அவள் பகவானுக்குப் பத்னியாகையாலே கூடவேயிருந்து தர்மங்களை அநுஷ்டிக்கிறுளென்பதைச் சொல்லுகிறபடியினலும், பகவானையே தேவதையாக உடையது என்று சிலர் அநுஸந்தானம் செய்திருப்பதினலும். அப்படியே விஷ்ணு தந்திரத்தில் ஐம்பத்தி நாலாவது அத்யாயத்தில் 'புருஷஸூக்தம், அத்யாத்மஸூக்தம், மஹோபநிஷத், இவைகளைப் படிக்கவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஆப்தர்களினல் செய்யப்பட்ட பாஞ்சராத்திர ஶாஸ்திரங்களில் உபயோகம் விதிக்கப்பட் டிருப்பதினல் ஸூத்திரகாரரால் உபயோகம் சொல்லப்பட்ட யஜ்ஞோபவீதம் முதலிய மந்திரங்களைப் போலவே கிலங்களாகிய கீழ்ச் சொல்லிய வாக்யங்களும் ஶ்ருதிகள்தான் என்பது ஸந்தேஹம் இல்லாத விஷயம். இத்தால் மஹோபநிஷத் சிலரால் உதாஹரிக்கப்படவில்லையே என்கிற ஆக்ஷேபமும் நிராகரிக்கப்பட்டது. பாஷ்யகாரர் முதலியவர்களினல் எடுக்கப்படாத உபநிஷத்துக்கள் எவ்வளவு காணப்படவில்லை? கேவலம் ஸ்ரீபாஷ்யகாரரால் மாத்திரம் மஹோபநிஷத் எடுக்கப்பட்டது என்பதில்லை. அவருக்கு

ர்யைர்யாமுநமுநிபிரபி புருஷநிர்ணயே ஸங்க்ருஹீதா | ந சைவ சைகஸித்தாந்திபிரேவ த்ருதேவோக்தா நி, அபி து தத்விருத்த ஸந்மாத்ர ப்ரஹ்மஜகதோர் பேதாபேதௌ நிர்ணயத்பிர் யாதவப்ரகாசைரபி ஸ்வகீதாபாஷ்யேஷ்டமாத்யாயே, ததா தந்மதாநுஸாரிபிர் நாராயணார்யைரபி தத்வநிர்ணயே ச்ருதிதாத்பர்யநிர்ணயாதிகாரே ஸோபப்ரும்ஹண நாநாவிதச்ருதிநிகரோதாஹரணாவஸரே மஹோபநிஷதாத்யம் 'ஏகோ ஹ வை நாராயண:' இத்யாதி காம்ச்சதுரோ மந்த்ராநுதாஹ்ருத்ய, ஏஷா தேவோபநிஷத் 'ஏதௌ த்வௌ விபுதச்ரேஷ்டௌ ப்ரஸாதக்ரோதஜௌ ஸ்ம்ருதௌ | ததாதர்சிதபந்தாநௌ ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகௌ ||' இத்யாதிபிரிதிஹாஸை: 'தஸ்ய க்ரோதஸமுத்பூதோ ருத்ர: ப்ரஸாதாச்ச பிதாமஹ:', 'யஸ்ய ப்ரஸாதஜோ ப்ரஹ்மா ருத்ரச்ச க்ரோதஸம்பவ:' இத்யாதிபி: புராணைச்சோபப்ருஹ்மிதேத்யு

ப்ராசார்யராகிய ஸ்ரீ ஆளவந்தாராலும் புருஷ நிர்ணயம் என்னும் க்ரந்தத்தில் அது எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படியாகில் ஒரு ஸித்தாந்தத்தில் இருப்பவர்களினுல் மாத்திரம் அது எடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் உசிதமல்ல. பின்னை எதுவென்னில்:-அந்த ஸித்தாந்திகளுக்கு விருத்தமான ஸத் என்பது மாத்திரம் ப்ரும்மம், ப்ரபஞ்சத்திற்கும் அதற்கும் பேதமும் உண்டு, அபேதமும் உண்டு என்று நிரூபிக்கிற யாதவப்ரகாசராலும், கீதா பாஷ்யத்தில் எட்டாவது அத்யாயத்திலும், அப்படியே அவர் மதத்தை அனுஸரித்த நாராயணார்யராலும் தத்வநிர்ணயம் என்னும்க்ரந்தத்தில் வேதங்களின் தாத்பர்யத்தை நிஸ்சயம் செய்யும் அதிகாரத்தில் உபப்ரும்மணங்களோடுகூட அநேகம் விதங்களான உபநிஷத் வாக்கியங்களின் கும்பலை நிரூபிக்கும் ஸமயத்தில் மஹோபநிஷத்தின் முதலாவதாகிய 'ஏகோ ஹ வை நாராயண:'என்றிவை முதலான நாலு மந்திரங்களை எடுத்து, இந்த உபநிஷத்து 'ஸந்தோஷத்திலும் கோபத்திலும் உண்டானவர்களாகச் சொல்லப்படுகிற இந்தத்தேவ ஸ்ரேஷ்டர்களான இவ்விருவர்களும் அந்தப் பகவானால் காண்பிக்கப்பட்ட வழியை உடையவர்களாய் ஸ்ருஷ்டி ஸம்ஹாரம் இவைகளைச் செய்கிறார்கள்' என்றிவை முதலிய இதிஹாஸங்களினாலும், 'அந்தப் பகவானுடைய கோபத்தினால் உண்டானவர் ருத்திரன், அனுக்ரஹத்தினால் உண்டானவர் ப்ரும்மா', 'எந்த நாராயணனுடைய அனுக்ரஹத்தினால் ப்ரும்மா உண்டானாரோ, ருத்திரன் கோபத்தினால் உண்டானவரோ' என்றிவை முதலிய புராணங்களினாலும் உபப்ரும்மணம் செய்யப்பட்டது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படி

க்தம் | ஏவம் விச்வாஸாநர்ஹத்வாதிதி யதுக்தம் ப்ரத்யுக்தம் |

யத்து ச்ரூயமாணாநாம் 'பவித்ரம் தே' இத்யாதீநாம் மந்த்ராணாம் விநியோகாந்யபரத்வாத் நாபிமதஸித்திரிதி, ததபி துச்சம் | யதாந்யத்ர விநியோகாத் தத்பர்யவஸாநம் ஸ்வீக்ரியதே, ததா பாஞ்சராத்ரே 'ததஸ் ஸ்வாபிதாநகம் ததஸ் ஸம்ஜ்ஞாத்மகம் ஜபேத்' இத்யுபக்ரமேண ஸுதர்சநமேவாபிதாநாத் ஸுதர்சநே ப்ரதிஷ்டாஸ்நபநாதிஷு விநியோகாத் ச்ரூயமாணார்த்தாந்வயாத்து தத்பர்யவஸாநம் கிம் நேஷ்யதே? யத்ரைகார்த்தபரத்வமேவ தத்ராந்யபரத்வம் நிஷித்யதே, தஸ்மிந் ஸுதர்சநவிநியோகேபி ந தத்பர்யவஸாநமேவ தத்ராந்யபரத்வமேவ கிம் ந நிஷித்யதே? ச்ருதஸ்யது விநியோகஸ்ய ப்ரஸ்ருதிரேவ ச்ருதவிநியோகாநுஸாரேணாந்வயநிர்ணய இத்யுக்தமிதி சேத், கேயம்

இல வாக்யங்கள் நம்பத்தக்கவைகளல்ல வாகையினுல் என்று சொன்னது நிராகரிக்கப்பட்டது.

வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற 'பவித்ரம் தே' முதலிய மந்திரங்களுக்கு வேறு கர்மங்களில் உபயோகம் சொல்லப்பட்டிருப்பதினால் அவைகள் வேறு அர்த்தங்களைச் சொல்லுகின்றனவாதலால் உன் இஷ்டம் ஸித்திக்காது என்று சொல்லப்பட்டதே, அதுவும் உசிதமல்ல. ஏனெனில் வேறிடத்தில் உபயோகம் சொல்லப்பட்டிருப்பதினால் வேறு அர்த்தத்தைச் சொல்லுகின்றன என்பது எப்படி அங்கீகரிக்கப் படுகிறதோ, அப்படியே பாஞ்சராத்திர ஸாஸ்திரத்தில் 'அந்தந்தத் தேவதைகளின் பெயரை உடைய மந்திரத்தைச் சொல்லவேண்டும்' என்றாரம்பித்து 'ஸுதர்சனத்தைச் சொல்லுகிறது' என்று சொல்லி இருப்பதினாலும் ஸுதர்சநத்தைப் பற்றிய ப்ரதிஷ்டை திருமஞ்சனம் செய்தல் முதலிய கர்மங்களில் உபயோகம் சொல்லப்பட்டிருப்பதினாலும், வாக்யத்தில் சொல்லப்படுகிற அர்த்தத்திற்குப் பொருந்தி இருப்பதினாலும் அந்த ஸுதர்சநமாகிற அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பதும் ஏன் அங்கீகரிக்கப்படவில்லை? ஒரு அர்த்தத்தைச் சொல்லுகிறது என்றேற்பட்டிருப்பதினாலேயே வேறொரு அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பது இல்லை என்று மறுக்கப் படுகிறது என்னில், அப்படியாகில் ஸுதர்சநத்தையும் பற்றிய கர்மங்களில் விநியோகப்பட்டிருப்பதினால் அந்த அர்த்தத்தைச் சொல்லுகிறது என்றேற்பட்டிருப்பதினாலேயே அதைத் தவிர வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பது ஏன் மறுக்கப்படவில்லை? ஸ்ருதியில் சொல்லப்பட்டிருக்கும் விநியோ

[illegible]

கம் ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கும் விநியோகம் இவைகள் ஒன்றுக்கொன்று விரோதம் வரில் ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கும் விநியோகத்தை அநுஸரித்து அர்த்தத்தை நிஶ்சயம் செய்ய வேண்டும் என்று முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறதே என்னில், இந்தத் தீர்மானம் எந்தக் காரணத்தினுல் செய்யப்பட்டது ? ஶ்ருதியைக் காரணமாக உடைய ஸ்ம்ருதி அதற்கு விருத்தமாக இருக்க முடியாதாதலால் என்னில், அப்பொழுதும் ஶ்ருதியில் விநியோகம் சொல்லப்பட்ட மந்திரங்களுக்கு ஸ்ம்ருதியினுல் கௌணமான விநியோகம் சொல்லப்பட் டிருப்பதும் இல்லாமல் போகவேண்டிவரும். ஏனெனில் வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பது ஸமமாக இருப்பதினுலே விரோதம் பரிஹரிக்கமுடியாதாதலால். நிகண்டுவினுல் வேறொரு அர்த்தத்தைச் சொல்லுகிறதென்று சொல்லில் விரோதம் வரும், வேறொரு ஶ்ருதியினுல் வேறொரு அர்த்தத்தைச் சொல்லுகிறதென்று சொல்லில் விரோதம் இல்லை என்பதற்குக் காரணம் இல்லை. ஆதலால் ஶ்ருதிகளுக்காவது ஸ்ம்ருதிகளுக்காவது எந்தெந்த விஷயத்தில் விரோதம் வருகிறதோ அந்தந்த விஷயத்திலும் எதில் ஶப்தங்களின் ஶக்தியை அநுஸரித்தும், வேறொரு விரோதம் இல்லாமையாலும் முக்ய மென்றே நிர்வாஹம் செய்ய முடியுமோ அந்த விஷயத்திலும் ஒன்ருய் இருந்த போதிலும் அநேகமாயிருந்தபோதிலும் அந்தப் பதங்கள் முக்யங்கள் என்றே சொல்லவேண்டும். இவ்விடத்தில் விரோதம் என்பது எப்படிப்பட்டது? ஒரு பதத்திற்கே அந்த அர்த்தத்தைச் சொல்லுகை, அதைச்சொல்லாமை என்னில், உசிதமல்ல, ஸ்ம்ருதிகளில் கௌணமாக விநியோகங்கள் சொல்லப்பட்டிருப்பது ஸித்திக்காமல்போக வேண்டிவரும் என்று முன்பே சொல்லப்பட்டிருப்பதினுல். ஶ்ருதியிலும் 'இந்திரனைச் சொல்லும் மந்திரத்தினுல் கார்ஹபத்யம் என்னும் அக்னியைப் பற்றி உபஸ்தானம் செய்யவேண்டும்' என்று அந்த வாக்யத்தில் சொல்லப்

[illegible]

பட்டிருக்கும் இந்திரனென்னும் பதத்திற்கு ரூடி ஶக்தியைவிட்டுப் பதங்களைப் பிரித்து அர்த்தம் சொல்லுவதை அநுஸரித்து விநியோகம் சொல்லப்பட்டிருப்பதற்கு லோபம் வரவேண்டி வருமாதலாலால். அர்த்தத்தை ஶக்தியினுல் சொல்லுகிறது என்பதும் ஶக்தியினுல் அதைச் சொல்லவில்லை என்பதும் விரோதம் என்னில், ஒரே ப்ரயோகத்தில் அப்படியிருப்பது விரோதமா? அன்றிக்கே வெவ்வேறு ப்ரயோகங்களில் அப்படியிருப்பது விரோதமா ? முதலாவது பக்ஷம் உசிதமல்ல, அப்படி ஒப்பவில்லை யாதலால், இரண்டாவது பக்ஷம் உசிதமல், ப்ரயோகம் வெவ்வேருக இருப்பதினுலேயே விரோதம் பரிஹரிக்கப்பட் டிருப்பதினுல். அநேகம் ஶக்திகளை உடைய (அதாவது அநேக அர்த்தங்களைச் சொல்லக்கூடிய ஶக்தியை உடைய) பதத்திற்கு கூடச் சேர்ந்திருக்கும் அந்தந்த இதரபதங்களின் அர்த்தத்தை அநுஸரித்து அததற்குத் தகுந்ததான அர்த்தங்களைச் சொல்லும் தன்மை உண்டாதலால் (அது விரோதம் என்று சொல்லில்) அப்படி அநேகம் அர்த்தங்களைச் சொல்லும் பதங்கள் எல்லாவற்றையும் விடவேண்டி வருமாதலால் அப்படி விரோதம் இருந்தாலும் இருக்கட்டும். ஶ்ருதியைக் காரணமாக உடைய ஸ்ம்ருதி ஶ்ருதியை அநுஸரிக்க வேண்டும் என்பதும் இருக்கட்டும். அப்படி இருந்தபோதிலும் ஸ்வபாவத்திலேயே எல்லா வஸ்துக்களையும் ப்ரத்யக்ஷமாக அறியக்கூடியவராயும் எல்லையில்லாத கருணை முதலிய குணங்களின் கூட்டங்களை உடையவராயும் வேதாந்தங்களில் நிரூபிக்கப்படுகிற பகவானுகிய புருஷோத்தமனுல் சிதறி இருக்கும் அளவில்லாததாயும் மற்றவர்களினுல் அறிய முடியாதவைகளாயும் இருக்கிற எல்லா உப

ஷாஂ ச தத்த்வார்த்தவிஶதீகரணாய ப்ரணீதே ச பஞ்சராத்ரஶாஸ்த்ரே விநியோகாநுஸாரேண ஶ்ருதிரபி நேதவ்யா । ந ஹி ஶ்ருதௌ தே விநியோகா: ஸர்வே ரூடிஶக்த்யைவ முக்யதயைவ நியந்தும் ஶக்யா:, ஐந்த்ர்யாதி விரோதப்ரஸங்காத் । யஸ்த்வயமிதாநீம் விநியோகாநுஸாராதக்ஷராநுஸாராச்சாஸ்மாபிருபவர்ண்யதே, ஸ ந கேவலம் தேஷாம் [illegible], அபி து வக்ஷ்யமாண ஸ்பஷ்டதரேதிஹாஸபுராணாதிவசநஸம்வாதாதிதி ஸர்வதா ஸமூலமேவ । அத: ஸித்தமந்யத்ர விநியுக்தாநாமபி ஸௌதர்ஶநவிநியோகாத் ததர்த்தபரத்வம் ।

யத்து லிங்காநாமலிங்காநாம் வா ஸர்வேஷாம் ஸௌதர்ஶநே கர்மணி ததோऽந்யத்ர ச விநியோகஸ்ஸர்வைஸ்ஸ்வீக்ருதஸ்தத்ர விநியுக்தாநாம் ச மந்த்ராணாம் [illegible]

நிஷத்துக்களினுடையவும் உண்மையான அர்த்தத்தை ப்ரகாசப்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட பாஞ்சராத்திர ஶாஸ்திரத்தில் சொல்லப்படுகிற விநியோகத்தை அநுஸரித்து ஶ்ருதியும் நிரூபிக்கப்பட வேண்டும். ஶ்ருதியில் சொல்லப்படுகிற எல்லா விநியோகங்களும் ரூடிஶக்தியினாலேயே (இருகுறியினாலேயே) முக்யமாகவே இருக்கவேண்டும் என்று ஏற்படுத்தவும் முடியாதல்லவா? ஏனெனில் கீழ்ச்சொல்லிய இந்திரனைப் பற்றிச்சொல்லுகிற மந்திரத்தினால் அக்னியை உபஸ்தானம் செய்யும்படி விநியோகம் சொல்லியிருப்பதற்கு லோபம் வரவேண்டி வருமாதலால். விநியோகங்களை அநுஸரித்தும் தங்களில் இருக்கும் எழுத்துக்களை அநுஸரித்தும் எந்த அர்த்தம் இப்பொழுது நம்மால் நிரூபிக்கப்படுகிறதோ, அது கேவலம் அவைகளின் தாத்பர்யத்தை ஊஹித்துச் சொன்னவையல்ல, பின்னை எப்படி என்னில்:—மேலே நிரூபிக்கப்படப்போகிற மிகவும் ப்ரகாசங்களான இதிஹாஸம் புராணம் முதலியவைகளில் சொல்லி இருக்கும் வசனங்களாலும் இது அநுவாதம் செய்யப்படுகிறபடியினால். ஆதலால் இப்பொழுது சொல்லப்படுகிற அர்த்தம் எவ்விதத்திலும் மூலப்ரமாணத்தை அநுஸரித்தவைகளே. ஆகையினால் வேறொரு கர்மங்களில் விநியோகிக்கப்பட்டிருந்தபோதிலும் ஸுதர்ஶநத்தைச் சேர்ந்த கர்மங்களில் விநியோகம் சொல்லப்பட்டிருப்பதினால் ஸுதர்சநமாகிற அர்த்தத்தைச் சொல்லுகின்றன என்கிற அர்த்தம் ஸித்தித்து விட்டது.

லிங்கங்களாயும் லிங்கமில்லாமல் படிக்கப்பட்டவைகளாயும் இருக்கிற கீழ்க்குறித்த [illegible]ந்திரங்களுக்கும் ஸுதர்ஶநத்தைச் சேர்ந்த கர்மங்களிலும் [illegible]தைத் தவிர மற்ற கர்மங்களிலும் விநியோகம் எல்லோராலும் ஒப்புக்

186730

வ்ருக்ஷாதி ஸம்ரக்ஷண சாஸ்த்ர தீபிகை.

இச்சிறு புஸ்தகம், மனிதர்களுக்கு ஸர்வ விதத்தாலும் உபயோகமாகும், மரம், செடி, கொடி, புல்பூண்டு முதலியவைகளை வ்ருத்தி செய்யவேண்டிய இடம், காலம், காப்பாற்றும் விதம், பலன்களை அதிகமாக உற்பத்தி செய்யும் விதம், அவைகளுக்கு உண்டாகும் நோய்களை தடுக்கும் வழி, புஷ்பங்களுக்கு அதிக வாஸனையைத் தரும் மார்க்கம், செடி, கொடிகளுக்கு பல வர்ணங்கள் உண்டாகும் வழி முதலான விஷயங்கள் இப்பரதகண்டத்தில் வஸித்த மஹர்ஷிகளாலும், மஹான்களாலும் அநேக பாஷையில் எழுதப்பட்டுள்ள அனேக க்ரந்தங்களிலிருந்து எளிதான தமிழில் எல்லோருக்கும் உபயோகமாகும்படி தஞ்சாவூர் ஜில்லா, விஜயபுரம் போஸ்டு, புலிவலம் என்னும் ஊரில் வஸிக்கும் Mr. R. கோபாலய்யரால் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் மேல்க்கண்ட விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

காா்யதா்சி.

மனையடி சாஸ்த்ரம்.

மனிதர்கள் அவரவர்கள் அந்தஸ்துக்குத் தகுந்தபடி க்ருஹம் முதலான வாஸஸ்தானங்களை கட்டவேண்டிய இடம், காலம், ப்ரமாணம் முதலிய லக்ஷணங்களைக் குறித்து பல சாஸ்த்ரங்கள் ஸம்ஸ்க்ருதத்திலிருக்கின்றன. வீடுகளில் ஏற்படுத்தவேண்டிய ஸ்தானங்கள், நிலைகதவு முதலியதின் அளவு ப்ரமாணம், வீட்டிற்கு ஸமீபத்தில் ஏற்படுத்தவேண்டிய குளம், கிணறு, நெல் களஞ்சியம், மாட்டுத் தொழுவம் முதலியதுகளை சாஸ்த்ர ரீதிப்படி க்ருஹாதிகளை ஏர்ப்படுத்துவார்களாகில் அக்க்ருஹங்களில் வஸிப்பவர்கள் வம்ச வ்ருத்தியுடன் ஸுகிகளாக இருப்பார்கள். இதை அனுஸரிக்காதவர்கள் அப்படி இருக்கவில்லை என்று அனுபவத்தால் ஸித்தம். இந்த விஷயங்கள் எல்லோருக்கும் அவச்யமாகையால் அதுகளை எல்லோரும் தெரிந்துகொள்ள எளிதான தமிழில் ஸம்ஸ்க்ருத நூல்களிலிருந்து இந்த புஸ்தகம் ஷை கோபாலய்யரால் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை முதல்பாகம் ரூ. 1. இரண்டாம்பாகம் அணா. 9. வேண்டுவோர் மேல்கண்ட விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

காா்யதா்சி.

ஜலாசய நிர்மாண லக்ஷண சாஸ்த்ரம்.

இது பூமிக்குள் இவ்வளவு ஆழத்தின் கீழ் தண்ணீர் இருப்பதைக் கண்டுபிடிக்கும் வழிகளை நம் கர்க, மனு, வஸிஷ்ட, அத்ரி முதலான மஹர்ஷிகளால் பல க்ரந்தங்களில் எழுதி இருப்பதை ஸங்க்ரஹித்து ஸுலபமான தமிழில் எல்லோருக்கும் உபயோகமாக இருக்கும்படி செய்து நமக்கு கிணறுவெட்ட ஸுலபமாய் தெரிந்துகொள்ளக்கூடியதற்க்காக எழுதப்பட்ட புஸ்தகம், இதில் நீர் இத்தனை வகை என்பது, பரீக்ஷைகள் செய்து தண்ணீரைக் காணும் வகை; கெட்ட ஜலத்தை சுத்தம் செய்யும் வழி முதலான 16-விஷயங்கள் இதில் அடங்கி இருக்கின்றன. இதுவும் ஷை கோபாலய்யரால் எழுதப்பட்டது. இதன் விலை அணா. 8, வேண்டுவோர், அவருக்கே எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பரம்.

தீபிகைக்கு 'வ்யாஸங்கள்' சந்தா, விலாஸ மாறுதல்கள், இன்னும் தீபிகை விஷயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய விவரத்துக்கு ஆகும் கடிதங்கள் எல்லாம் ஸபையின் கார்யதரிசிக்கு, 2/11 ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம், வேப்பேரி போஸ்டு என்ற விலாஸத்துக்கு அனுப்பவேணும்.

வ்யாஸம் எழுதுகிறவர்கள் விஷயத்தை எளிதான தமிழ் நடையில் எழுதிப் ப்ரமாணங்களைக் கீழ்க்குறிப்புக்களாக எழுதியனுப்பவேணும். ஸம்ஸ்க்ருத ஶ்லோகங்களுக்கும் வாக்கியங்களுக்கும் கூடவே தமிழ் மொழிபெயர்ப்பு எழுதிவிடவேணும். வ்யாஸங்களை நேரில் அச்சாபீசுக்கு அனுப்பப்படுவதால் எழுத்துக்களை ஸ்பஷ்டமாகவும் விரளமாகவும் கடுதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதி அனுப்பும்படி ப்ரார்த்திக்கப்படுகிறது.

மெம்பர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் விலாஸத்துக்கு ஸஞ்சிகைகள் அப்போதைக்கப்போது வெகு ஜாக்ரதையுடன் அனுப்பப்பட்டு வருகின்றன. ஸஞ்சிகைகள் வேண்டிய அளவு தான் அச்சிடப்படுவதால் தபால் மூலமாகவோ, ஸரியான முகவிலாஸம் இல்லாததினாலோ சேராத ஸஞ்சிகைகளுக்கு நாங்கள் உத்தரவாதமாகமாட்டோமென்று விநயத்துடன் தெரிவிக்கிறோம்.

பழைய ஸஞ்சிகைகள் அடங்கிய புஸ்தகங்கள் ஸ்வல்பமாக இருப்பதாலும் தேவை ஜாஸ்தியாக இருப்பதாலும், வேண்டியவர்கள் தாமதமின்றி எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

கார்யதர்சி.

ஸ்ரீ:

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம்.
தமிழ்மொழி பெயர்ப்புடன்.

திருவஷ்டாக்ஷரம், த்வயம், சரமச்லோகம் என்று மூன்று ரஹஸ்யங்களின் அர்த்தங்களை நிரூபிக்கும்பொருட்டு ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் என்னும் க்ரந்தத்தை மணிப்ரவாளத்தில் ஸாதித்தருளினார். ஸங்க்ரஹருசிகளும் அதை ஸுலபமாய் அநுஸந்திக்கும் பொருட்டும், தமிழ்ப்பாஷை நடையாடாத இடங்களிலிருப்பவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டும் அவருடைய திருக்குமாரராகிய ஸ்ரீகுமார வரதாசார்யர் என்ற ஸ்ரீநைனாராசார்யர் அவ்வர்த்தங்களை ஸம்ஸ்க்ருத பாஷையில் இந்த க்ரந்தத்தில் அருளிச்செய்தார். இது ஸ்ரீ உ. வே பண்டிதபூஷணம் வித்வான் சே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியாலும், அவர் சிஷ்யரும் வேதாந்த தீபிகை பத்ராதிபருமான நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாலும் எல்லோரும் படித்து விஷயத்தைத் தெரிந்து கொள்ளும்படி எளிதான நடையில் தமிழ் மொழி பெயர்ப்புடன் இயற்றப்பட்டது. இது வேதாந்த தீபிகையின் மறுபதிப்பு. இதன் விலை அணா. 8. வேண்டுவோர் - ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். சில ப்ரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

Published by the Secretary, Sri Vaishnava Siddanta Sabha,
Purasawalkam Madras.